மலர்-5 இதழ்-115 ஜூன் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




மாதமிருமுறை

வருடத்தில் 120 நாட்கள் மனிதர்களுக்கு மற்ற நாட்கள் தேவர்களுக்கு அருளும் ஐயப்பன்

## ஈசனிடம் ஒடுங்கிய

# சப்தரிஷிகள்

www.aanmeegamalar.com
e- magazine
e- magazine

# உண்மையான ஆட்சி எப்படி இருக்க வேண்டும்

கிருஷ்ணர் தர்மரை பார்ப்பதற்காக சென்றார். அப்போது தர்மர் ஏழைகளுக்கு தான தர்மங்கள் செய்து கொண்டிருந்தார். தான தர்மங்களை முடித்துவிட்டு கிருஷ்ணரை சந்தித்த தர்மர், தான் தினமும் தான தர்மம் செய்வதை பற்றி மிக சிறப்பாகவும் உயர்வாகவும் எடுத்துச் சொன்னார். ஏழைகளுக்கு தர்மம் செய்வதால் நான் மிகவும் உயர்ந்தவனாக இருக்கின்றேன் என்ற ஒரு எண்ணம் அவர் மனதில் இருந்தது.

அதனால், தான் சிறந்த மன்னன் என்ற கர்வமும் அவரிடம் இருந்தது. இதனைப் புரிந்து கொண்ட கிருஷ்ணர் உண்மையான ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதை மறைமுகமாக தர்மருக்கு போதிக்க முடிவு செய்தார்.

கிருஷ்ணர் தர்மரிடம் நாம் பாதாள லோகம் வரை சென்று வரலாமா என்றார்.

கிருஷ்ணரும் தர்மரும் பாதாள லோகம் சென்றார். அங்கே பலிச் சக்கரவர்த்தி ஆண்டு வருவதை சற்று விசித்திரமாகப் பார்த்தார் தர்மர்.

இங்கு ஆட்சி நடப்பது போலவே தெரியவில்லையே என்று தர்மர் தனக்குள் சிந்தித்துக் கொண்டே சென்றார். ஆனால் மக்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதை மட்டும் அவரால் காண முடிந்தது.

அப்பொழுது தர்மர் தினமும் ஏழைகளுக்கு பொருட்களை தானமாக வழங்கும் உயர்ந்த குணத்தையும் அந்த பெருமையையும் உயர்வாக பலிச்சக்கரவர்த்திக்கு எடுத்துச் சொன்னார் கிருஷ்ணர்.

தர்மரிடம் வந்த பலிச்சக்கரவர்த்திஉண்மையில் நீங்கள் மிகவும் உயர்ந்தவர்என்று பாராட்டி புகழ்ந்தார். நானும் உங்களைப் போல் தர்மம் கொடுக்க எண்ணுகிறேன் ஆனால் என் நாட்டில் தானம் கொடுத்தாலும் வாங்குவதற்கு ஒரு ஏழைகள் கூட இல்லாமல் இருக்கிறார்கள் என்று நினைத்துப் பார்க்கின்ற பொழுது நான் மிகவும் வேதனைப்படுகிறேன் என்று தன்னை மிகவும் தாழ்த்திக்கொண்டு சொன்னார்.

இதைக்கேட்ட தர்மர் நம் நாட்டில்ஏழைகள் இருக்கிறார்களே அதற்கு காரணம் நம்முடைய ஆட்சியின் சிறப்பு இன்மையே என்ற உண்மையை புரிந்து கொண்டு ஏழைகளே இல்லாத சிறந்த ஆட்சியை கொடுக்க முடிவு செய்தார்.




# அம்பாளுக்குரிய 64 வகை உபசாரங்கள்




1. "பாத்யம்" திருவடிவகளைக் கழுவதற்கான தீர்த்தம் கொடுத்தல்.
2. ஆவராணாவரோபணம் நகைகளை கழற்றுதல்.
3. ஸுகந்திதைலாப்யங்கம் வாஸனை எண்ணை தேய்த்தல்.
4. மஞ்ஜனசாலாப்ரவேசனம் குளியலறைக்குச் செல்லுதல்.
5. மஞ்ஜனசாலாமணி பீடோபவேசனம் குளியலறை யிலிலுள்ள மணிமய ஆஸனத்திலிருத்தல்
6. திவ்யஸ்னானீயோத் வர்த்தனம் ஸ்நானத் திற்குரிய வாஸனைப் பொடிகளை சரீரத் தில் தேய்த்தல்.
7. உஷ்ணோதக ஸ்நானம் வென்னீரில்குளித்தல்.
8. கனககலசச்யுத ஸகல தீர்த்தாபிஷேகம் தங்க மயமானகுடங்களிலிருந்து கொட்டும் எல்லாவித தீர்த்தங்களாலும்அபிஷேகம் செய்தல்.
9. தௌதவஸ்த்ர பரிமார்ஜ்ஜனம் வெளுத்த துணியால் உடம்பு துடைத்தல்
10. அருணதுகூல பரிதானம் சிவப்பு பட்டை உடுத்துதல்.

– தொடர்ச்சி 7ம் பக்கத்தில்

# பதவி உயர்வு, வியாபார விருத்திக்கு பாட வேண்டிய முருகன் பாடல்

காங்கேயத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள திருத்தலம் கொங்கணகிரி. இங்கு வட்டமலை என்ற பெயருடன் திகழும் குன்றின், சுயம்புவாக, தபஸ் குமாரஸ்வாமியாக கந்தன் கோயில் கொண்டிருக்கிறார்.

சுமார் 1,200 ஆண்டுகள் பழைமை வாய்ந்த இந்தத் தலம், கொங்கண சித்தரால் நிர்மாணிக்கப் பட்டதாகவும் கூறுகிறார்கள்.

அனைத்து கோவில்களிலும் மூலவர் பிரதிஷ்டையின் போது யந்திர ஸ்தாபனம் விக் கிரகங்களுக்குக் கீழே பதிக்கப்படும். ஆனால் இக்கோயிலில் பீடத்திலேயே யந்திரங் கள் பதிக்கப்பட்டுள்ளன. 'ஸ்வாமி யந்திர ரூபமாக எழுந்தருளியுள்ளது, இந்தக் கோயிலின் சிறப் பம்சம்'

மேலும், மூலவர் முன் சமர்ப்பிக்கப்படும் பால் தானாகவே பொங்கும் அதிசயம், இக்கோயிலின் சிறப்பிற்கு சான்றாக விளங்குகிறது.

இதனாலேயே இத்தலத்தை பொங்கு திருத் தலம் எனப் போற்றுகின்றனர்.

இத்தலத்து முருகன் மீது அருணகிரிநாதர் திருப்புகழில் ஒரு பாடல் பாடியுள்ளார்.

"ஐங்கரனை ஒத்தமனம் ஐம்புலம்அ கற்றிவளர்
அந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவித னக்குள்வளர்
செந்தமிழ்வ ழுத்திஉனை
அன்பொடுது திக்கமனம் அருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி அருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்திசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனெ அருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு
இங்கிதமெ னுற்றமனம்
உன்றனைநி னைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரகைஷபுரி
வந்தணைய புத்தியினை அருள்வாயே
கொங்கில்உயிர் பெற்றுவளர்
தென்கரையில் அப்பரருள்
கொண்டுஉட லுற்றபொருள் அருள்வாயே
குஞ்சரமு கற்கிளைய கந்தன்என வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே"

செவ்வாய்க்கிழமைகளில், வீட்டில் முருகனுக்கு நெய் தீபம் ஏற்றிவைத்து, சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்து, வட்டமலை முருகனை நினைத்து இந்தப் பாடலைப் பாடி வழிபட, பதவி உயர்வு, வியாபார விருத்தி உட்பட சகல சௌபாக்கியங்களும் கைகூடும்.

இத்தலத்தில் இன்னொரு அதிசயமும் உள் ளது. இத்தலத்தை சுற்றி பால மரங்கள் அதிகம் உள்ளது, வீட்டில் நற்காரியங்கள் நடைபெறும்போது இந்த மரத்தின் குச்சிகளை பக்தர்கள் எடுத்துச் சென்று வழிபடுகின்றனர். இதனால் அந்த நற்காரியங்கள் எந்த தடங்கலுமின்றி இனிதாக நடைபெறுவதாக பக்தர்கள் நம்புகின்றனர்.



# ஆற்றுகால் பகவதியும் 10 நாள் விழாவும்

ஆற்றுகால் பகவதி அம்மன் கோவிலில் ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகை நட்சத்திரத்தில் தொடங்கி 10 நாட்கள் நடைபெறும் இதில் முக்கியமானது மாசி மாதம் பூரநட்சத்திரமும், முழு பவுர்ணமியும் இணையும் நாளில் பொங்காலை பண்டிகை கொண்டாடப்படுகிறது.

இந்த பொங்காலை விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிகழ்வு நடைபெறும். இப்படி கொண் டாடப்படும் ஒவ்வெரு நாளுக்கும் ஒரு நோக்கம் உண்டு. அதன்படியே பத்து நாள் விழாவும், அதன் நோக்கத்தையும் விரிவாக பார்ப்போம்.

### முதல் நாள் விழா

விழாவின் முதல் நாளில் தேவி கண்ணகியை விழாவுக்கு அழைத்துவரும் நிகழ்ச்சி நடக்கும். அன்று கோவில் தந்திரி தேவியின் உடைவாளுக்கும், தனக்கும் காப்பு கட்டி விழா தொடங்குவதை அறிவிப்பார்.

தொடர்ந்து கண்ணகியின் வாழ்க்கை வரலாறு பாடல் பாடும் நிகழ்ச்சி தொடங்கும். கண்ணகியை கோவிலுக்கு அழைத்து அவரை அங்கு தங்கவைக்கும்படியாக இந்த பாடல்கள் அமைந்து இருக்கும்

### 2-வது நாள் விழா

2வதுநாளில் தேவிகண்ணகி யின் திருமணத் திற்கான ஏற்பாடுகள் குறித்த பாடல்கள் பாடப்படும். திருமண சடங்குகள், தேவி அணியும் உடைகள் குறித்த கருத்துகள் இப்பாடலில் இடம் பெற்றிருக்கும் பொங்காலை விழா தொடர்ந்து தேவிக்கு பூஜைகள் மற்றும் சடங்குகள் நடைபெறும்

### 3வது நாள் விழா

3ம் நாள் விழாவில் கண்ணகி கோவலனுக்கான திருமண சடங்குகள் பற்றிய பாடல்கள் பாடப்படும் இதனை மாலப்புரம் பாட்டு என்று அழைப்பார்கள் இது திருமண வீடுகளில் காணப்படும் உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் குறிப்பதாக அமைந்திருக்கும்

### 4ம்நாள் திருவிழா

ம் நாள் திருவிழாவில் கண்ணகியின் திருமணம் நடைபெற்று, இல்லற வாழ்க்கையை தொடங்கிய கோவலன் பின்னர் ஏழையாக வீடு திரும்பும் காட்சி குறித்த பாடல்கள் பாடப்படும்

தொடர்ந்து கண்ணகி தன் காற்சிலம்பை கழற்றி கோவலனிடம் கொடுத்து அதனை விற்று பணம் ஈட்டும் படி கூறுவதும், அதனை ஏற்றுக்கொண்ட கோவலன், கண்ணகியின்



காற்சிலம்புடன் கடை வீதி நோக்கி புறப்படும் காட்சிகளும் இப்பாடலில் இடம்பெற்றிருக்கும்.

### 5ம் நாள் திருவிழா

மதுரை நகரில் கண்ணகியின் காற்சிலம்பை விற்க செல்லும் கோவலனை, பாண்டிய மன்ன னின் பொற்கொல்லன் பார்ப்பதும், அவன் பாண்டிய ராணியின் காற்சிலம்பை களவாடியது கோவலன் என குற்றம் சாட்டுவது பற்றிய பாடல்கள் பாடப்படும். தொடர்ந்து அந்த பொற்கொல்லன், பாண்டிய மன்னன் முன்பு கோவலனை அழைத்து சென்று நிறுத்துவது.

### 6ம் நாள் விழா

பாண்டிய மன்னனின் விசாரணையில் கோவலன் கள்வன் என்று தீர்ப்பிடப்படுவான். இதையடுத்து கோவலனை வீரர்கள் கொலை களம் அழைத்து சென்று அவனை கொலை செய்வார்கள் இது பற்றிய பாடல்கள் 6ம் நாள் விழாவில் இடம்பெறும்

### 7ம்நாள் விழா

7ம் நாள் அன்று கோவலன் கொலை செய் யப்பட்ட தகவல் கண்ணகிக்கு தெரியவரும். அதை கேட்டு ஆவேசம் அடையும் கண்ணகி, கைலாசத்திற்கே சென்று சிவனை வணங்கி, கொலையுண்ட தன் கணவனை மீண்டும் உயிர் பிக்க வேண்டுவார். அவரது வேண்டுதலை ஏற்று சிவன் அளித்த வரத்தால் கோவலன் மீண்டும் உயிர்பெறுவான்.

இந்த நிகழ்ச்சிகள் 7ம் நாள் விழாவில் பாடப்படும். அன்று நள்ளிரவு வரை விழா




நிகழ்ச்சிகள் நடைபெறும். இதனால் அன்று இரவு தாமதமாகவே கோவில் நடை அடைக்கப்படும்

### 8நாள் திருவிழா

8ம் நாள் விழாவன்று காலை கோவில் நடையும் தாமதமாகவே திறக்கப்படும். அன்று கண்ணகி தன் கணவன் கோவலனை சதி செய்து கொலைபழிக்கு ஆளாக்கிய பொற்கொல்லனை வதம் செய்வார் அதன்பின்பும் அவரது ஆக்ரோஷம் குறையாது. இதனை உணர்த்தும் வகையில் 8ம் நாள் பாடல்கள் பாடப்படும்

### 9ம்நாள் திருவிழா

கோவிலில் நடைபெறும் 9ம் நாள் திருவிழாதான் சிறப்பு வாய்ந்தது அன்று கண்ணகி, தன் கணவன் கோவலனை கொலை செய்த பாண்டிய மன்னனிடம் சென்று நீதி கேட்பார்.

நீதி தவறிய பாண்டிய மன்னனையும் அவர் வதம் செய்வார். பாண்டிய மன்னனை வதம் செய்த கண்ணகியின் வெற்றியை கொண்டாடும் வகையில் அன்று பொங்கல் விடப்படும்

### 10நாள் திருவிழா

பொங்காலை விழா முடிந்த மறுநாள் 10ம் திருவிழாவன்று தேவி கண்ணகிக்கு பக்தர்கள் விஷேச பூஜைகள் செய்கிறார்கள் அம்மனை ஆசுவாசப்படுத்தும் நிகழ்ச்சிகளும் நடைபெறும். பின்னர் தேவி நகர்வலம் வருவார். அதை தொடர்ந்து விழா நிறைவு பெறும்.



# மிகுந்த பலன் தரும்
# கருங்காலி மரம்

## செவ்வாய் தோஷம் நீங்க:

கருங்காலி மரத்தை நம் மக்கள் செவ்வாய் கிரகத்தின் அம்சமாக வணங்கி வருகின்றன. சிவன் கோவில் களில் கருங்காலி மரத்தை வணங்கி வருங்கின்றன.

செவ்வாய் கிரக தோஷத்தை போக்ககூடிய தன்மை கருங்காலி மரத்திற்கு உண்டு. செவ்வாய் கிரக தோஷத்தால் பாதிக்க பட்டவர்கள் இந்த கருங்காலி வைத்து பூஜை செய்ய வேண்டும்.

அபிரிதமாக பிரபஞ்ச ஆற்றலை ஈர்த்து கொடுக்க வல்லது. செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் இந்த மாலை அணிந்தால் தோஷம் நீங்கி திருமண தடைகளை நீக்கும்.

சகோதர் பிரச்சனைகள் சரியாகும், கணவன் மனைவி பிரச்சனை இருப்பின் பிரச்சனை நீங்கி கணவன் மனைவி உறவு மேம்படும்.

இது நம்மிடம் இருந்தால் அதிர்ஷ்டம், நமது பேச்சை மற்றவர் கேட்டு நடப்பர், அனைவரும் நம்மை மதிப்பர், ஜன வசியம், தேவதா வசியம், குபேர யோகம் கிடைக்கும் என்பது போன்ற நம்பிக்கைகள் இன்றும் பலரிடம் உள்ளதை காணலாம்.

## செய்வினை கோளாறு நீங்க:

கருங்காலி தண்டம் அல்லது கட்டை இருக்கும் இடத்தில் தீய் சக்திகள், செய்வினை கோளாறு, வசியம் போன்றவை நெருங்காது.

வியாபார தொழில் போட்டிகளில் வெற்றி கிட்டும் நிலபுலன்கள் வாங்க வழி வகுக்கும். நிலம் சம்மந்த பட்ட தொழில் செய்பவர்கள் இதை அணிந்து கொள்ள அத்துறையில் வெற்றி வாகை சூடலாம்.

விஷ பூச்சிகள் நம்மை அண்டாமல் பாது காக்கும்.

வாகன விபத்துகளை தடுத்து நமது பயணங்களை பாதுகாக்கும். நெருப்பின் பயம் போக்கும் அதன் அபாயத்திலிருந்து பாதுகாக்கும்.

அனைத்து முனிவர்கள் கையில் கருங்காலி தண்டம் எப்போதும் இருக்கும்.

வைரம் பாய்ந்த கட்டை அதாவது மிகவும் பழமையான வயதான மரத்தில் இருந்து கிடைக்கும் பொருட்கள் மிகவும் சக்தி வாய்ந்தது.




## கருங்காலி மரம் பயன்கள்:

கருங்காலி மரம் மின் கதிர்வீச்சுகளைத் தன்னுள் சேமிக்கும் தன்மை கொண்டது.

இதனால் இதன் நிழலில் அமர்ந்தால் கூட நோய் நீங்கும் வல்லமை கொண்டது..

கருங்காலி மரம் மின் கதிர்வீச்சுகளைத் தன்னுள் சேமிக்கும் தன்மை கொண்டது...!

## ராசியும் நட்சத்திரமும்

கருங்காலி மரம் மேஷம் ராசி, விருச்சிகம்

ராசி, அஸ்வினி நட்சத்திரம், பரணி நட்சத்திரம், விசாகம் நட்சத்திரம், அனுஷம் நட்சத்திரம், மிருகசிரிடம் நட்சத்திரம் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும், செவ்வாய்க்கிழமை அன்று பிறந்தவர்களுக்கும், மார்ச் 21 முதல் ஏப்ரல் 20 வரை பிறந்தவர்களுக்கும் நல்ல மரமும், மருந்துமாகும்.

நோய்கள் நீங்க கருங்காலிகட்டையை கையில் தாயத்தாக அணிந்து கொண்டாலும் நல்ல பலன் இருக்கும்.



ஆர். சதீஷ்,

எல்லா கோயில்களிலும் கும்பாபிஷேகத்தின் போது கருங்காலி கட்டைகளை கலசத்தின் உள்ளே போடுவார்கள்

அதனால் இடி மின்னலால் எந்த பாதிப்பும் அந்த கோயிலை சுற்றி வசிக்கும் நபர்களுக்கு வருவதில்லை.

கருங்காலி மரம் ரொம்ப அரிதான மரம். ஒரு சில ஆலயங்களில் மட்டுமே இப்போது இருக்கிறது.




### கருங்காலி மாலையின் பயன்

நவகிரக நாயகர்களில் இது செவ்வாய் பகவானுக்குரியது. இவர் கொடுக்கும் அனைத்து பலன்களும் இந்த கருங்காலி மாலை அணிவதன் மூலம் நமக்கு கிடைக்கும்.

ஆண் பெண் என இருபாலரும் அணிந்து பயன்பெறலாம்.

நமது உடலில் இரத்தத்தை சுத்தப் படுத்தும்.

### ஜீரண கோளாறு நீங்கும்

பெண்கள் மாதவிடாய் கோளாறு சரியாகும்.

ஆண்,பெண் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தை பேறுக்கு வழி வகுக்கும். உடலில் சோம்பல் நீங்கி சுறு சுறுப்பு உண்டாகும்.

மேலும் மாங்கல்ய பலத்தை பலப்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மை அதிகரிக்கும். உடல் உறுதியடைய செய்யும்.

பயப்படும் குழந்தைகளுக்கு கருங்காலி மாலை அணிவிக்கலாம்.

கோபங்கள் சிறிது சிறிதாக குறையும். மன பயத்தை நீக்கி தைரியத்தை வழங்கும். பேச்சுதிறமை அதிகரிக்கும்.

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283

## அம்பாளுக்குரிய 64 வகை உபசாரங்கள்

2–ம் பக்க தொடர்ச்சி

11. அருண குசோத்தரீயம் சிவப்பு ரவிக்கை அணிவித்தல்.
12. ஆலேப மண்டப ப்ரவேசனம் அலங்கார அறைக்குச் செல்லுதல்.
13. ஆலேப மண்டப மணிபீடோபவேசனம் மேற்கூறின அறையில் உள்ள ரத்னமயமான பீடத்தில் இருத்தல்.
14. சந்தனாகரு குங்கும ம்ருகமத கஸ்தூரி கோரோசனாதி திவ்ய கந்த ஸர்வாங்கீண விலேபனம் அகில், குங்குமப்பூ, புனுகு, பச்சைக் கற்பூரம், கஸ்தூரி, கோரோசனை முதலான வாஸனை வஸ்துக்கள் கலந்த உயர்ந்த சந்தனத்தை உடம்பில் பூசுதல்.
15. கேசபாரஸ்ய காலாகருதூபம் தலை காய்வதற்கும், வாசனைக்கும் தூபமிடுதல்.
16. மல்லிகா, மாலதி, ஜாதி, சம்பகாசோக சதபத்ர பூக குஹளி, புன்னாக கல்ஹார முக்யஸர்வர்த்து குஸுமமாலா: மல்லிகை (பிச்சகம்பிச்சி) மாலதி, சம்பகம், அசோகம் தாமரை, பாக்குப் பூ, குஹளி,(வாழைப்பூவில் இருக்கும் கேஸரம்) புன்னைப்பூ, செங்கழுநீர், ஆறுருதுக்களிலும் உண்டானவையாவும் வாசனையாயும் இருக்கும்புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலைகள்.
17. பூஷண மண்டபப்ரவேசனம் நகைகள் அணிவதற்காக உள்ள அறையில் செல்லுதல்
18. பூஷண மண்டமணிபீடோபவேசனம் முன் கூறிய அறையில் ரத்னபீடத்தில் இருத்தல்.
19. நவமணிமகுடம் புதிதான ரத்ன கிரீடம் அணிதல்.
20. சந்த்ர சகலம் சந்த்ர கலை.
21. ஸீமந்தஸிந்தூரம் வகிட்டில் செந்தூரம் வைத்தல்

– தொடர்ச்சி 12ம் பக்கத்தில்

# சிவலிங்கம் மீது நாகம் வைக்கலாமா?

2021 ம் ஆண்டு நடக்கிற இந்த காலத்தில் எந்த சிவன்கோயிலுக்கு சென்றாலும் லிங்கத்தின் மேல் நாகம் இருக்கிறதை காணமுடிகிறது.

நாகத்துடன் கூடிய சிவ லிங்கத்தை கும்பிடும் படியாக கோவில் நிர்வாகத்தினர் செய்து இருப்பது சரியா? என்று சற்று ஆலோசித்து பார்க்க வேண்டியது அவசியம் ஆகும்.

எல்லா ராசி காரனுக்கும் நாகத்துடன் கூடிய சிவ லிங்கம் வழிபாடு நன்மை தருமா? என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

"லிங்கத்தின் மீது நாகத்தை வைத்து வழிபட்டால் அது நாகலிங்க உபாசனை என்று ஆகிறது."

ஒட்டு மொத்த இந்தியாவும், இந்து மதமும் தற்போது நாகலிங்கம் உபாசனையை மட்டுமே செய்யும்படியாக கட்டமைக்கப்பட்டு கொண்டு இருப்பது சரியா என்று சற்று சிந்தித்து பார்க்க வேண்டும்.

சிலர் கருதுவது உண்டு; சிவனே கழுத்திலும் தலையிலும் பாம்பை அனிந்து இருக்கிறானே!! அதனால் இதில் என்ன தவறு இருக்கிறது என்று யோசிக்க கூடும்.

அந்த பாம்பை சிவன் எந்த காரணத்துக்காக எந்த சூழ்நிலையில் அனிய நேர்ந்தது என்று யோசித்துப் பார்க்க வேண்டும். அதற்குரிய புராண கதையை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உதாரணமாக ஐயப்பன் சுவாமி புலிமீது அமர்ந்து காட்டில் உள்ள புலிகளை எல்லாம் நாட்டுக்குள் கொண்டு வந்தார். இந்த ஒரு காட் சியை கருத்தில் வைத்து கொண்டு ஐயப்பனை கும்பிட்டால் நாட்டுக்குள் புலிகள் வந்துவிடும் என்று நாம் பயந்தால், கருதினால் அது நமது அறியாமை பிழை அல்லவா.

ஐயப்பன் எந்த சூழ்நிலையில் எந்த காரணத்துக்காக புலிமீது அமர்ந்து நாட்டுக்குள் புலியை கொண்டு வந்தார் என்ற கதையை முழுமையாக படித்தால் தானே புரியும். அது அன்னைக்காக புலிப்பாலை கொண்டு வருவதற்காக செய்தது என்று தெரியவரும்.

அதுபோலதான் இந்த சிவன் விஷயத்திலும் நடந்த ஒரு நிகழ்ச்சி ஆகும். அது கிரேதா யுகத்தில் வாழ்ந்த முனிவர்கள் செய்த சிவ அத்தி தோஷம் நிகழ்ச்சி ஆகும்.

அதாவது பாரத தேசத்தில் நைமி சரேன்யத்தில் இருந்த முனிவர்கள் கிருதாயுக கால கட்டத்தில் சிவனின் தயவு இல்லாமல் நாமே யாகத்தின் மூலம் அனைத்தையும் வரவழைத்து கொள்ளலாம் என்ற ஆணவத்தில் இருந்தனர்.

அதாவது பரமாத்மா இன்றி ஜீவாத்மாவே எல்லா செயலும், முற்றும் செய்ய முடியும் என்ற ஆணவத்தில் இருந்தனர். முனிவர்களின் ஜீவாத்மாக்களின் இந்த ஆணவத்தை நீக்கவும்; உண்மையை புரிய வைக்கவும் அவர்கள் முன் எழுந்தருளி அந்த முனிவர்களிடம் அறிவு பூர்வமாக எடுத்துரைத்தார்.

ஆனால் முனிவர்கள் தாங்கள் பெற்று இருந்த சக்திகளின் மீதான நம்பிக்கையால் ஆணவம் மேலோங்கிய மனநிலையில் இருந்தனர்.

அதனால் அவர்கள் சிவனை அழிப்பதில் கவனம் செலுத்தினர் அப்போது பெரிய யாகம் செய்து அதில்



இருந்து உருவாகும் கொடிய விஷ பாம்புகளை சிவன் மீது ஏவினர்.

ஆனால் சிவனோ அந்த பாம்புகளை பிடித்து தனது ஆபரணமாக அனிந்து கொண்டார். அது அவரை ஒன்றும் செய்யவில்லை.



கி.செல்வராஜ்

இதேபோல்தான் ஒருமுறை,அசுரன் ஒருவனுடன் விநாயகர் போரிட்ட போது அந்த அசுரன் ஏவிய கொடிய விஷ பாம்பை விநாயகர் பிடித்து தனது இடுப்புக்கு ஆபரணமாக அணிந்து கொண்டார்.

இப்படிதான் சிவபெருமான் அந்த சண்டையை முடிவுக்கு கொண்டு வந்தார். முனிவர்களை பெரிய அளவில் தாக்காமல் அவர்கள் ஏவிய ஆயுதங்களை மட்டும் ஒடுக்கி; அவர்களின் அறியாமை ஆணவத்தை உணர செய்து திருத்தினார்.

எனவே சிவன் மீது காணப்படும் விஷபாம்புகள் எல்லாம் ஜீவாத்மாக்கள், முனிவர்கள் செய்த பிழையின் அடையாளங்கள், சாட்சிகள் ஆகும்.

எப்படி ஒரு வீரரின் உடலில் தொடையில் கதாயுதம் பட்ட தழும்புகள் இருக்குமோ; அவை எதிரிகளின் சூழ்சி, கோழைத்தனம், கோவாவேசத்தை காட்டுகின்றனவோ அதுபோன்றதாகும்.

பரம்பொருள்மீது கொடிய தீய பாம்புகளை ஏவியதே தவறு. ஏவியதும் அல்லாது அந்த நிலையிலேயே சாமியை ஆவகானம் படுத்தி; அந்த ரூபத்திலே சாமியை வழிபடுவது என்பது இன்னும் நாம் அறியாமை தவறு செய்கிறோம் என்பதை காட்டுகிறது என்று உணர வேண்டும்.

பரம்பொருள் பரிசுத்தர். நிற்குனன், நிராமயர், நீள்பரர், அவர் ஐந்து தொழில் செய்யும் மூர்த்தி. அவரை அவரது சுய வடிவில் வைத்து வழி படுவது தான் சரியானது ஆகும்.

நாகாத்தம்மன் மற்றும் நாகலிங்கம் என்ற தெய்வத்தை தவிர மற்ற வேறு எந்த சாமி சிலை மீதும் பாம்பு உருவை வைக்கா கூடாது.

காரணம், பாம்பு உரு ஆனது நாகராஜன், ஆதிசேஷன், வாசுகி, போன்றவர்களைமட்டும் குறிக்காது. அது ராகு, கேதுவையும் குறிக்கும். மேலும் மாந்தி, கலி, சாத்தான் போன்ற துர்தேவதைகளையும் குறிக்கும்.கலிகாலத்தில் மக்களுக்கு புண்ணியம் குறைவு என்பதால் அந்த பாம்பு உரு ஆனது துற்தேவதைகளான மாந்தி மற்றும் சாத்தானின் குறியிட்டாகவும் அது செயல்படும் என்ற உண்மையை கவனத்தில் எடுத்து கொள்ள வேண்டும்.

மேலும் நாம் எந்த லிங்கத்தை வழிபடுகிறோமோ அந்த லிங்க திருமேனியில் நமது ஆன்மா ஐக்கியமாகிவிடும். பிற்காலத்தில் அந்த லிங்கத்தை கும்பிடுபவர்களுக்கு அதில் ஐக்கியமானதேவதைகள், முனிவர்கள்,பக்தர்கள்அனைவரும் ஆசிர்வதிப்பர்.

அந்த வகையில் சூரியன் வழிபட்ட லிங்க திருமேனியில் சூரியபகவான் ஐக்கியம் ஆகி இருப்பார். எனவே அந்த சூரிய லிங்கம் திருமேனி மீது சூரியனை பிடித்த ராகுவின் அம்சமான பாம்பு உருவத்தை மேலே சாற்ற கூடாது.

ஆனால் தற்போது வரை சூரிய லிங்கத்தின் மீது நாக ஆபரனம் சாத்துவதை சில நேரங்களில் காணமுடிகிறது. இது இந்து மதத்தில் அறங்கேரிவரும் தெய்வ உபாசனை பிழையாகும்.

இதேபோல்தான் சந்திரன் லிங்கம் மீதும் பாம்பு உரு சாத்த கூடாது.

மேலும் கருடன் வழிபட்டு பூஜை செய்து சிவலிங்கம் திருமேனியில் ஐக்கியம் ஆகி உள்ள திருச்சிறு குடி கோவிலில் உள்ள சிவலிங்கத்தின் மீது பாம்பு உருவத்தை சாத்த கூடாது.




கருடனுக்கு ஆகாத பாம்பை கருடன் வழிபட்டு ஐக்கியம் ஆன சிவலிங்கத்தின் மீதே வைத்து வழிபடுவது என்பது மிகபெரிய சிவ உபாசனை பிழை ஆகும்.

மேலும் சில தெய்வங்கள் விலங்கு உரு எடுத்து குறிப்பிட்ட லிங்கத்தை வழிபட்டுஅதனுடன் ஐக்கியம் ஆகி இருப்பர். அந்த விலங்குகளைதான் அந்த அந்த சிவலிங்கம் மீது வழிபடுகிற விதமாக அமைத்து வழிபட வேண்டும்.

அந்த விலங்குக்கு மாற்றாக எதிரான பாம்பை கொண்டு சிவலிங்கம் தலைமேல் வைத்து அது பூ சாற்றி வழிபடுவது போல் செய்வது சிவ உபாசனை பிழை ஆகும்.

ஜோதிடத்தில் குரங்கு யோனிக்கும் பாம்பு யோனிக்

கும் பொருந்தாது என்பர். யோனி பொருத்தம் பார்க்கும் போது இதனை சொல்வர். அதுபோல குரங்கு வழிபட்டு ஐக்கியம் ஆன திருக்குரக்காவல் கோவில் லிங்கத்தின் திரு மேனி மீது பாம்பு உருவத்தை சாற்றுவது சிவ உபாசனை பிழை ஆகும்.

எனவே எந்த எந்த லிங்கத்தில் என்ன என்ன விலங்குகள் ஐக்கியம் ஆனதோ அதை அதை தான் சிவலிங்கத்தின் மீது சாற்றி வழிபட வேண்டும். அது தான் முறை ஆகும்.

ஆமை வழிபட்டு ஐக்கியம் ஆன திருக்கச்சூர் சிவலிங்கம் திருமேனி மீது ஆமை உருவை தான் சாற்ற வேண்டும். பாம்பு உருவை அல்ல.

ஈ வழிபட்டு ஐக்கியம் ஆன திருஈங்கோய்மலை சிவலிங்கம் திருமேனி மீது ஈ உருவை தான் சாற்றி உபாசனை செய்ய வேண்டும். பாம்பு உருவை அல்ல. சிலந்தி வழிபட்டு ஐக்கியம் ஆன திருவானைக் காவல் சிவலிங்கம் திருமேனி மீது சிலந்தி உருவை தான் சாற்ற வேண்டும். பாம்பு உருவை அல்ல.

கீழே ஜீவராசிகளும் அவை வணங்கிய லிங்கங்களையும் பட்டியலிட்டுள்ளோம்.

| | |
|---|---|
| கருங்குருவி | திருவலிவலம் |
| குரங்கு | திருக்குரக்காவல் |
| எலி வழிபட்ட | திருமறைக்காடு |
| தேனி | நன்னிலம் |
| வண்டு | திருநல்லூர் |
| பன்றி | திருச்சிவபுரம் |
| நாரை | திருநாரையூர் |
| ஜடாயு | திருச்சிராப்பள்ளி |
| நண்டு | திரு நீடூர் |
| முயல் | திருப்பாதிரிப்புலியூர் |
| மயில் | மயிலாடுதுறை |
| யானை | திருக்காளத்தி |
| பூனை | மேலப்பாதி |
| தவளை | ஆத்தூர் |
| மீன் | தேவராயன்பேட்டை |
| பசு | ஆவுர், பட்டீஸ்வரம், திருவாடுதுறை, திருவிழிமிழலை. |

இப்படியாக ஒவ்வொரு விலங்கும் சிறத்தை எடுத்து தீவிர பக்தி செலுத்தி அந்த சிவலிங்கம் திருமேனியில் ஐக்கியம் ஆன நிகழ்ச்சியை வருங்கால மக்கள் அறியும் படியாக அந்த அந்த சிவலிங்கம் திருமேனி மீது அந்த அந்த விலங்குகள் உருவத்தைதான் சாற்றி உபாசனை வழிபாடு செய்யப்பட வேண்டும்.

ஈஸ்வரன் எல்லா ஜீவராசிகள் வாழ்விலும் அருளலை செய்து இருக்கிறார் என்ற தத்துவத்தை உலகறியும் பொருட்டு; அந்த அந்த ஜீவ ராசிகள் உருவுத்தை சிவலிங்கத்துடன் சேர்த்து உபாசனை செய்வது என்பது அந்த அந்த கோவில் நிர்வாகிகளின் கடமை ஆகும்.

இதை அவர்களுக்கு எடுத்துறைப்பது சிவ தொண்டர்களின் கடமை ஆகும். இதை நடைமுறைபடுத்துவது இந்து அறநிலை துறை யின் கடமை ஆகும்.

இது மட்டும் அல்ல முனிவர்கள் வழிபட்டு ஐக்கியம் ஆன சிவலிங்கங்கள், தேவர்கள் வழிபட்டு ஐக்கியம் ஆன சிவ லிங்கங்கள் என்று ஒரு பட்டியலே இருக்கிறது.

அந்த சிவலிங்கம் திருமேனி மீதும் அவற்றுடன் பூஜை செய்து ஐக்கியம் ஆன முனிவர், தேவதைகள் உருவத்தை தான் வைக்க வேண்டும். அதற்கு மாற்றாக அவற்றில் ஐக்கியம் ஆகாத பாம்பு உருவத்தை சாற்றி வழிபட்டால் அது பெரிய தெய்வ குற்றம் ஆகிவிடும்.

நாக பாம்பு உருவத்தை எந்த சிவலிங்கத்தின் மேல் வைத்து உபாசனை பூசை செய்வது? என்று கேட்டால்;

வாசுகி மற்றும் நாகராஜன் வழிபட்டு ஐக்கியம் ஆன திருமாளம் சிவலிங்கம், மற்றும் திருப்பாம்புரம், திருநாகேஸ்வரம், சீர்காழி, வாட்போக்கி, நானகக்காரோனம், கீழ்வேளூர்.. போன்ற கோவில்கள் எழுந்தருளி உள்ள சிவலிங்கம் திருமேனி மீது மட்டும்தான் நாக பாம்பு உருவத்தை சாற்றி உபாசனை பூசைகள் செய்ய வேண்டும்.

மற்றபடி பார்க்கிற சிவலிங்கம் மீது எல்லாம் நாக ஆபரணம் சூட்டி நாகலிங்கம் வழிபாடாக சைவத்தை நிலை நிறுத்திவிட கூடாது.

சிவ பரம்பொருள் எல்லா கனங்களுக்கும் அருளியவர், அருளுகிறவர் என்ற உண்மையுடன் நிலை நிறுத்தி ஆவகானம் படுத்தி உபாசனை வழிபாடுகள் செய்யப்பட வேண்டும்.

இதனால் இறைவனை முழுமையாக வழிபட்ட பலன் நமக்கு கிடைக்கும்.

சிவ சகஸ்ர நாமத்துடன் தொடர்புடைய கிரியா பூஜை கட்டமைப்பை மறைந்து போகாமல் நிலை நிறுத்துவது சைவத்தின் தலையாய கடமை ஆகும்.

– கி.செல்வராஜ்,
தன்னார்வ மக்கள் மேம்பாட்டு ஆய்வாளர்
தொடர்பு எண்:6369014582

# 16 வடிவங்களில் காட்சிதரும் முருகன்




**1. ஞானசக்திதரர்:** இந்த முருகனை வழிபட்டால் நினைத்த காரியங்கள் வெற்றியுடன் முடியும். திருத்தணிகையில் எழுந்தருளியிருக்கும் மூலவர் திருவடிவம் ஹஞானசக்திதரர்’ திருக்கோலமாகும்.

**2.கந்தசாமி:** இவரை வழிபட்டால் சகல காரியங்களும் சித்தியாகும். பழனிமலை ஆண்டவர் திருவடிவம் இது.

**3.ஆறுமுகதேவசேனாபதி:** இவரை வழிபட்டால் மங்களகரமான வாழ்வு கிடைக்கும். சென்னிமலையாண்டவர் திருக்கோயிலில் கர்ப்பக்கிரக மாடம் ஒன்றில் இந்த திருவுருவம் உள்ளது.

**4. சுப்பிரமணியர்:** இவர் தன்னை வழிபடும் பக்தர்களின் வினைகளை நீக்கி ஆனந்தப் பேற்றினை அளிக்கக் கூடியவர். நாகை மாவட்டத்திலுள்ள திருவிடைகழி முருகன் கோயில் மூலவர் சுப்பிரமண்யர் ஆவார்.

**5.கஜவாகனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள்விலகி ஓடும். திருமருகல், மேல்பாடி, சிதம்பரம் நடராஜர் கோயில் கீழைக் கோபுரம் ஆகிய இடங்களில் யானை மீதிருக்கும் இவரது திருவுருவம் உள்ளது.

**6.சரவணபவர்:** தன்னை வழிபடும் அடியவர்களுக்கு மங்கலம், ஒலி, கொடை, சாத்வீகம், வீரம் முதலிய குணங்களை அளிப்பவர். சென்னிமலை, திருப்போரூர் ஆகிய இடங்களில் இவரது திருவடிவம் இருக்கிறது.

**7. கார்த்திகேயர்:** இவரை வழிபட்டால்சகல சவுபாக்கியங்களும் வந்து சேரும். கார்த்திகை நட்சத்திர நாட்களில் இவரைவழிபடுவது விஷேசமான பலன்களைத் தரும். கும்பகோணத்தில் உள்ள கும்பேஸ்வரர் கோயிலிலும், தாராசுரம் ஐராவதீச்வரர் கோயிலிலும் கார்த்திகேயர் திருவுருவம் உள்ளது.

**8. குமாரசாமி :** இவரை வழிபட்டால் ஆணவம் அடியோடு நீங்கும். நாகர்கோவில் அருகில் இருக்கும் குமாரகோவிலில் இவரது திருவடிவம் உண்டு. கங்கை கொண்ட சோழபுரத்தில் இவருக்குப் பஞ்சலோக விக்கிரகம் இருக்கிறது.

**9. சண்முகர்:** இவரை வழிபட்டால் சிவசக்தியை வழிபட்ட பலன் கிடைக்கும். திருச்செந்தூரில் உள்ள முருகன் அருட்கோலம் சண்முகர் திருவடிவமாகும்.

**10. தாரகாரி:** ஹதாரகாசுரன்’ என்னும் அசுரனை அழித்ததால் முருகப் பெருமான் இத்திரு நாமத்தைப் பெற்றார். உலக மாயைகளில் இருந்து விடுபட வழிசெய்யும் திருக்கோலம் இது. விராலி மலையில் உள்ள முருகன் கோயிலில் தாரகாரி இருக்கிறார்.

**11.சேனானி:** இவரை வழிபட்டால் பகை அழியும். போட்டிகளில் வெற்றி கிடைக்கும். பொறாமை நீங்கும். தேவிகாபுரம் ஆலயத்தில் சேனானி திருவுருவம் இருக்கிறது.

**12. பிரம்மசாஸ்தா:** இவரை வழிபட்டால் எல்லா வகைவித்தைகளிலும் தேர்ச்சி பெறலாம். சகல வித கலையறிவும் அதிகரிக்கும். கல்வியில் தேர்ச்சி கிட்டும். காஞ்

சிபுரத்தில் உள்ள குமரக்கோட்டம் ஆனூர், பாகசாலை, சிறுவாபுரி ஆகிய இடங்களில் பிரம்மசாஸ்தா திருக்கோலம் உள்ளது.

**13. வள்ளிகல்யாணசுந்தரர்:** இவரை வழிபட்டால் திருமணத் தடைகள் விரைவில் அகலும், கன்னிப் பெண்களுக்குக் கல்யாண பாக்கியம் கிடைக்கும். திருப்போரூர் முருகன் கோயில் தூண் ஒன்றில் இவர் திருவுருவம் இருக்கிறது.



புனிதவேல்

**14. பாலசுவாமி :** இவர், உடல் ஊனங்களையும், குறைகளையும் அகற்றும் தெய்வம். இவரை வழிபடுபவர்களுக்கு உடல் நலம் கிடைக்கும். திருச்செந்தூர், திருக்கண்டிர், ஆண்டாள் கும்பம் கோயில்களில் பாலசுவாமி திருவுருவம் இருக்கிறது.

**15. சிரவுபஞ்சபேதனர்:** இவரை வழிபட்டால் துன்பங்கள் விலகும். மனச்சஞ்சலம் அகலும். திருநெல்லிக்கா, திருக்குறங்குடி, திருநளி பள்ளி ஆகிய இடங்களில்இவரது திருவுருவம் உண்டு.

**16. சிகிவாகனர்:** மயில் மீது இருக்கும் முருகன் அருட்கோலம் இது. ஆலயம் பலவற்றில் அழகுற அமையும் திருவடிவம். தன்னை வழி படுபவர்களுக்கு இன்பமான வாழ்வு அளிப்பவர்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

## அம்பாளுக்குரிய 64 வகை உபசாரங்கள்

7-ம் பக்க தொடர்ச்சி




22. திலகரத்னம் நெற்றிப்பொட்டில்வைக்கும் ரத்னம்.
23. காலாஞ்ஜனம் கறுப்பு மை.
24. வாளீயுகளம் காதுகளில் அணியும்வாளி என்ற நகை (ஜிமிக்கி என்பர் இப்போது)
25. மணிகுண்டலயுகளம் ரத்ன குண்டலங்கள்.
26. நாஸாபரணம் மூக்குத்தி புல்லாக்கு.
27. அதரயாவகம் உதட்டின் சிவப்புசாயம்
28. ப்ரதமபூஷணம் மாங்கல்யம்.
29. கனகசிந்தாகம் தங்கமயமான புளியிலை போன்ற நகை.
30. பதகம் பதக்கம்
31. மஹாபதகம் நவரத்னங்கள் இழைத்த ஸ்ரீ சக்ரம்(பெரியோர் கூற்று)
32. முக்தாவலி முத்துமாலை.
33. ஏகாவளி ஒருவடமாலை (நக்ஷத்ரமாலை)
34. ச்சன்னவீரம் ஒரு ஆபரண விசேஷம்.
35. கேயூரயுகளசதுஷ்டயம் ஒவ்வொரு கையிலும் இரண்டிரண்டு தோள் வளைகள்.
36. வலயாவளி வளைகள்.
37. ஊர்மிகாவளி மோதிரங்கள்.
38. காஞ்சீதாம ஒட்டியாணம்.
39. கடிஸூத்ரம் அரைஞாண்கயிறு.
40. ஸௌபாக்யாபரணம் அரைமூடி (அரசிலை).
41. பாதகடகம் கால்காப்பு.
42. ரத்னநூபுரம் ரத்னமயமான கொலுசு
43. பாதாங்குளீயகம் கால்மெட்டி.
44. ஏககரேபாசம் ஓர்கையில் பாசக்கயிறு.
45. அன்யகரேஅங்குசம் மற்றொருகையில் தொரட்டி

– தொடர்ச்சி 25ம் பக்கத்தில்

## எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

Gmail இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com

# தில்லை காளியை தரிசிக்காவிட்டால் தில்லை சென்ற பலன் கிடைக்காது?

சிதம்பரத்தில் இரண்டு முக்கியமான ஆலயங்கள் உள்ளன. அனைவரும் அறிந்தது சிதம்பரம் தில்லை நடராஜர் ஆலயமே. ஆனால் அந்த தில்லை நடராஜர் ஆலயத்துக்குச் செல்பவர்கள் அந்த ஆலயத்தில் இருந்து அரை கிலோ தொலைவில் உள்ள தில்லை காளியம்மனையும் தரிசிக்காமல் வந்தால் தில்லை நடராஜரை தரிசித்தப் பலன் கிடைக்காது என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை.

சிதம்பர ஆலயத்தில் இருந்து இடதுபுறமாகச் சென்று முதலில் வரும் இடது திருப்பத்தில் திரும்பி நேராகச் சென்றால் அந்த சாலையின் இறுதியில் தில்லை காளியம்மன் ஆலயம் உள்ளது. அது மட்டும் அல்ல அந்த தில்லை காளியம்மன் வரக் காரணமாக இருந்த இரண்டு முனிவர்களான ‘ஆனந்தீஸ்வரர்’ மற்றும் ‘இளமையாக்கினார்’ போன்றவர்களின் சமாதிகளும் அந்த ஊரில் உள்ளது. அங்கும் போய் அவர்களை தரிசிப்பது இன்னும் விசேஷம் என்று கூறுகிறார்கள். தில்லை காளியம்மன் ஆலயத்தின்வரலாறு மற்றும் மகிமைகள் என்ன? இனி படியுங்கள்.

சில காலத்துக்குப் பின்னால் நடக்க இருந்த ஒரு சம்பவத்தில் பார்வதியே வேறு அவதாரம் எடுத்து ஒரு அரக்கனை அழிக்க வேண்டும். அந்த அரக்கனை பார்வதியால் மட்டுமே அழிக்க முடியும் என்பது தேவ விதியாக இருந்தது. ஆகவே பார்வதி சிவபெருமானை விட்டு பிரிந்து செல்லவில்லை என்றால் பார்வதி உக்ரக குணத்தைக் கொண்டு அந்த அவ தாரத்தை எடுக்க முடியாது. மேலும் பார்வதி முன்னர் ஒரு கட்டத்தில் பெற்று இருந்த சாபத்தினால் சிவபெருமானை பிரிந்து சில காலம் வாழ வேண்டும். இவை அனைத்தையும் அந்த ஈசன் அறிந்து இருந்தார். ஆகவே அதற்காக அவர் ஒரு நாடகத்தை நடத்தத் துவங்கினார்.

அதற்கேற்ப ஒரு முறை தேவ லோகத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் ஒரு வாக்குவாதம் ஏற்படுகின்றது. அது நீ பெரியவனா இல்லை நான் பெரியவளா எனத் துவங்கிய சண்டைசக்தி இல்லையேல் சிவனும் இல்லை என பார்வதி வாதாடும் நிலைக்குப் போக கோபமுற்றசிவபெருமான் பார்வதியை கோர உருவம் கொண்ட காளியாக மாறுமாறு சாபம் தந்து விடுகிறார்.

சிவனை விட்டுப் பிரிய மனமில்லாத பார்வதி அழுது புலம்பி தன்னை மன்னித்து விடுமாறு அவரை கேட்டுக் கொண்டப் பின் சாப விமோசனம் பெற்று மீண்டும் அவரை எப்படி அடைவதுஎனக் கேட்க அதற்குசிவபெருமான் கூறினார் “இன்னும் சிறிது காலத்தில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நடக்க உள்ளது. அந்த நேரத்தில் நீ இதே காளி




www.aanmeegamalar.com







உருவில் தேவர்களுக்காக போரிட்டு அசுரர்களை அழிப்பாய். அப்போது நீ தில்லை மரங்கள் சூழ்ந்த தில்லைக்கு வந்து என்னை நினைத்து தவம் இருக்க வேண்டும். அப்போது ஒரு கட்டத்தில் உன்னுடன் சேர்ந்து நடனமாடி உன்னை என்னுடன் மீண்டும் அழைத்துக் கொள்வேன்".

காலம் ஓடியது. தாரகாசுரன் என்றஅசுரன் தோன்றி தேவர்களை துன்புறுத்திவரலானான். தேவர்களும் ரிஷி முனிவர்களும் மும்மூர்த்திகளிடம் சென்று அவன் தொல்லையில் இருந்து தம்மை காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து சிவபெருமானிடம் ஆலோசனைக் கேட்க அவர் காளி உருவில் இருந்த பார்வதியை அதற்கு அனுப்பினார். காளி உருவில் இருந்த பார்வதி யுத்தகளத்துக்குச் சென்றாள். தாரகாசூரனையும் அவன் சேனையும் அழித்தப் பின் வெற்றி அடைந்தாள். ஆனால் அவனை வெற்றி கொண்டபின்னும் அவள் கோபம் அடங்கவில்லை. வெறியாட்டம் போல ஊழித்தாண்டவம் ஆடத் துவங்கினாள்.

தாரகாசுரன் அழிந்தாலும்முனிவர்களின் தொல்லை தொடர்ந்தது. அவர்கள் சிவ பெருமானிடம் மீண்டும் சென்று வேண்டினார்கள். அனைவரும் சிவபெருமானையே மீண்டும் மீண்டும் தஞ்சம் அடைவது காளிக்குப் பிடிக்கவில்லை. அதனால் அவளுக்கு சிவபெருமான் மீது கோபம் ஏற்பட்டது. அவரை விட தானே பெரியவள் என முன்னர் கொண்டு இருந்த எண்ணம் இன்னமும் குறையவில்லை. வெறியும் அடங்கவில்லை. அவளுடைய உக்ரஹத்தினால் அனைத்து முனிவர்களும் ரிஷிகளும் சொல்லொண்ணத் துயருக்கு ஆளாகினார்கள்.

அந்த நேரத்தில் அங்கு இருந்த வியாக்கிரபாதர் மற்றும் பதஞ்சலி முனிவர்களின் வேண்டுகோளை ஏற்று சிவபெருமான் அவர்களுக்கு தில்லையில் திருநடனக் காட்சி தந்தார். அதை மெச்சி அனைவரும் அமர்ந்து இருந்த வேலையில் காளி சிவனை நடனப் போட்டிக்கு அழைத்தாள். போட்டியில் யார் தோற்றாலும் அந்த ஊரின் எல்லைக்கு சென்று விட வேண்டும் என்பது நிபந்தனை. நடனம் துவங்கியது. அனைத்து தேவர்களும் கடவுட்களும் இசை ஒலிகளை எழுப்ப காளி மற்றும் சிவபெருமானின் நடனப் போட்டி தொடர்ந்தது. வெற்றித் தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் அனைவரும் திகைத்து நின்றபோது சிவபெருமான் ஊர்த்துவத் தாண்டவம் என்பதை ஆடிக் காட்டினார். அதில் அவர் தனது காலால் கீழே விழுந்த குண்டலத்தை எடுத்து காலை மேலே தூக்கி தனது காதில் அணிந்து கொள்ள அதே ஊர்த்துவத் தாண்டவத்தை பெண்ணான காளியினால் செய்ய முடியாமல் நாணம் தடுத்தது. பெண்ணினால் எப்படி காலை மேலே தூக்கிக் காட்டுவது? அதனால் போட்டியில் தோற்றுப் போனாள்.

போட்டியில் தோற்று போனதும் அவமானம் அடைந்தவள் ஊர் எல்லைக்குச் சென்று உக்ரமாக வட எல்லைக் காளியாக அமர்ந்தாள். அதைக் கண்ட அனைவரும் அதிர்ந்து போனார்கள். சக்தி இல்லையேல் சிவனும் இல்லை. இருவரும் இணைந்து இல்லாதவரை பிரபஞ்சம் எப்படி இயங்கும் என கவலைப்பட அனைத்து தேவர்களும், மகாவிஷ்ணுவும் பிரும்மாவும் ஒன்று சேர்ந்து காளியிடம் சென்று அவளை சாந்தமடையுமாறு வேண்டிக் கொண்டனர். பிரும்மா அங்கேயே அமர்ந்து கொண்டு காளியை புகழ்ந்து வேதங்களை ஓதி அவளை பூஜிக்க

அவர் பூஜையை ஏற்றுக் கொண்ட காளி பிரும்ம சாமுண்டேஸ்வரி என்ற பெயரால் நான்கு முகம் கொண்ட சாந்தநாயகி ஆகி அதே இடத்தில் இன்னொரு சன்னதியில் சென்று அமர்ந்தாள்.



பொ.பாலாஜிகணேஷ்

ஆக அந்த ஆலயத்தில் ஒரு சன்னதியில் உக்ரஹ காளி தேவி யாக பல ஆயுதங்களையும் ஏந்திய எட்டுக் கைகளைக் கொண்ட தில்லைகாளியாகவும் இன்னொரு சன்னதியில் சாந்தமான நான்கு முக பிரும்மசாமுண்டேஸ்வரி அம்மனாக வும் காட்சி தந்தவாறு பக்தர்களை ரட்சித்து வருகிறாள். காளி சொரூபத்தில் உள்ளவள் பில்லி சூனியப் பேய்கள், சினம், பகை, கொடிய வியாதிகள், ஆணவம், அகம்பாவம் போன்றவற்றை அழித்து வருகிறாள். சாந்தமான பிரும்மசாமுண்டேஸ்வரி கல்வி, ஐஸ்வர்யம், வீரம் போன்ற அனைத்தையும் அளித்து வருகிறாள்.

இந்த ஆலயத்தை பன்னிரெண்டாம் நூற் றாண்டில் அதாவது 1229 மற்றும் 1278-ம் ஆண்டுகளில் கோபெருங்ஜிங்கன் என்ற மன்னன் கட்டினான் என்று தெரிகின்றது. அந்த காலத்தில் நடைமுறையில் இருந்த பழக்கத்தின் படி போரில் வெற்றி அடைவதற்காக தமது தலையையே தருவதாக வேண்டிக் கொண்ட படையினர் சிலர் போர்களில் வெற்றிப் பெற்றுப் பின் அங்கு வந்து தமது தலைகளையே வெட்டிக் கொண்டு மரணம் அடைந்ததாக வாய்மொழிக் கதைகளும் உள்ளதாம்.

ஆலயம் மிகப் பெரியது அல்ல ஆனால் மிகப் பழமையானது. உள்ளே நுழைந்ததும் வலது பக்கத்தில் உள்ள தனி சன்னதியில் ஆனந்த நர்த்தனமாடும் விநாயகரும், இடதுபுற தனிச் சன்னதியில் முருகனும் கிழக்கு திசையை நோக்கிப் பார்த்தவாறு இருந்து கொண்டு பக்தர்களை காத்து அருளுகிறார்கள். முதல் மண்டபமான தியான மண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும் அலுவலக அறைகள் உள்ளன. தியான மண்டபத்தில் பக்தர்கள் நெய் விளக்குகளை ஏற்றி தேவிகளை ஆராதிக்க விளக்கு பீடமும் வைக்கப்பட்டு உள்ளது. அடுத்த மண்டபத்தில் உள்ள சன்னதிகளில் நாம் காணுவது கிழக்கு நோக்கி தனி சன்னதியில் அமர்ந்து உள்ள தில்லைக் காளி அம்மனும் மேற்கு நோக்கி அமர்ந்து உள்ள பிரும்ம சாமுண்டியும் ஆவர்கள். அவர்கள் அங்கு அமர்ந்தவாறு பக்தர்களை ரட்சித்து கொண்டு உள்ளனர். அந்த மண்டப நுழைவாயிலில் இருபுறமும் பிரும்மாண்டமான காவல் தேவதைகள் நின்றுகொண்டு உள்ளார்கள். சுவறுகளில் சில கல்வெட்டுக் குறிப்புகள்காணப்படுகின்றன.

பிரும்ம சாமுண்டி

தில்லை காளியம்மனுக்கு வெள்ளைப் புடவையை மட்டுமே சாத்துகிறார்கள். தினமும் நல்லெண்ணெய் அபிஷேகம் மட்டுமே நடை பெறுகின்றது. காளி சாந்தம் அடையக்கூடாது என்பதற்காக உஷ்ணம்தரும் எண்ணையான நல்லெண்ணை மட்டுமே உபயோகிக்கின்றார்களாம். உடம்பு முழுவதும் மஞ்சளினால் ஆன குங்குமம் கொட்டப்பட்டு (அதைக் காப்பிடுதல் என்று கூறுகிறார்கள்) வெள்ளைப் புடவையால் உடல் மறைக்கப்பட்டு உள்ளது. கண்கள் மட்டும் ஜொலிக்கும் வகையில் வெள்ளை நிறத்தில் காட்சி தருகின்றது. தில்லை காளியை அந்த கோலத்தில் மட்டுமே தரிசிக்க முடிந்தது. (படத்தைப் பார்க்கவும்). சன்னதிக்கு பக்கத்திலேயே காளியை ஆராதித்து தீபம் ஏற்றி வேண்டிக் கொள்ள விளக்கு பீடமும் வைக்கப்பட்டு உள்ளது.


அந்த சன்னதியில் தில்லை காளியை தரிசிப்பவர்கள் கண்டிப்பாக அவள் உக்ரஹமான கண்களை உற்று நோக்கி அவளை வேண்டிக் கொண்டால்தான் பலன் உண்டு. ஆனால் அதற்கு மாறாக பிரும்ம சாமுண்டிக்கோ அனைத்து விதமான அலங்காரங்களும் செய்யப்பட்டு தேன், பால், போன்ற அபிஷேகங்களும் செய்யப் படுகின்றனவாம்.

அவள் சன்னதிக்கு பக்கத்தில் சுமார் ஆறு அல்லது ஐந்து அடி உயரமும் நான்கு அல்லது ஐந்து அடி சுற்றளவும் கொண்ட மிகப் பெரிய நாகதேவர் சிலை உள்ளது. காளியை வணங்கியப் பின் அவரையும் வணங்க வேண்டுமாம். அதன் பக்கத்திலேயே போர் வீரர்கள் தமது தலைகளை வெட்டிக் கொண்டு பலி தந்தக் காட்சியைக் காணலாம்.

மேலும் அந்த சன்னதிக்குள் அனைத்து பகுதிகளிலும் பைரவர், துர்க்கை, சண்டிகேஸ்வரர் போன்றவர்களும் காட்சி தருகிறார்கள்.

– பொ.பாலாஜிகணேஷ், சிதம்பரம்,
செல்: 9842550844

# எல்லா தெய்வங்களை விட மேம்பட்டவன் விராட் புருஷன்




**கடவுள் உருவாக்கிய மதம்**

சென்ற அத்தியாயத்தில் விராட் புருஷனின் தன்மைகளை பற்றி புருஷ சூத்தகம் விளக்கம் கொடுப்பதை பார்ப் போம். விராட் புருஷன் தனியாகவே இருக் கிறான் இதே நிலையில் தான் முன்பும் இருந்தான் இப்போதும் இருக்கிறான் இனி எப்போதும் அப்படியே இருப்பான். அவன் அழிவு என்பதை அறியாதவன் உணவை எடுத்துக் கொள்ளும் எல்லா உயிர்களும் இவனிடமிருந்தே வருகின்றது. உயிரை உற்பத்தி செய்யும் அவன் ஒவ்வொரு ஜீவனுக்கு உணவையும் உற்பத்தி செய்கிறான். உணவு என்பது உடலை வளர்ப்பது அன்று. உயிரை வளர்ப்பதாகும்.

விராட் புருஷன் எல்லா தெய்வங் களை விட மேம்பட்டவன். இவனுக்கு இணையாக எந்த கடவுளும் இல்லை. ஏனென்றால் இவனே எல்லா கடவுளுமாக இருக்கிறான். இவனது மனதிலிருந்துதான் சந்திரன் தோன்றினான் இவன் கண்களிலிருந்து சூரியன் தோன்றினான். இந்திரனும் அக்னியும் இவனது வாயிலிருந்து தோன்றியவர்களே. இவன் சுவாசம் தான் வாயுவாகும். உலகத்தில் காணுகின்ற யாவும் காணாத எல்லாமும் இவனன்றி வேறில்லை. உலகப் பொருளாகவும் இருக்கிறான் அந்த பொருட்களுக்கு அப்பாலும் இருக்கிறான். இப்படி 16 பாடல்களாக புருஷ சூத்தகம்



பிரம்மத்தை பற்றியும்அதன் உரு வம் ஆற்றல் குறித்து விளக்கிகொண்டுபோகிறது. இந்த விளக் கங்களுக்கு இடையில் மனித சிருஷ் டியை பற்றியும் பேசுகிறது. இனி ரிக் வேதத்தின் அக்னி என்ற இரண்டாவது மண்டலத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதை பார்ப்போம்.

அக்னியை அழியக் கூடியபிறவி கொண்ட மனிதனான எங்களுக்கு நாள்தோறும் சக்தியை கொடு அதே நேரம் அழிவற்ற நிலையை நோக்கி செல்லும் பாதையை காட்டி அருள் கொடு இப்போதும் இனி எப்போதும் குறைவில்லாத வளம் கொழிக் கும் வாழ்க்கையையே அறிவாளி வேண்டு கிறான். அந்த குறைவற்ற நிறைவான வாழ்வை எப்போதும் கொடுத்துக் கொண்டே இரு இப்படி அக்னி தேவனை நம்பிக்கையுடன் வழிபடும் வேத ரிஷி உரிமை நிறைந்த உறவுடன் அக்னியின் அருகில் நெருக்கமாக சென்று

அக்னியே எங்களிடம் அன்பு கொண்டவனாகவே நீ எப்போதும் இருக்கிறாய். நீ தான் எங்களுக்கு உயிர் கொடுத்த தந்தை என்பதை நாங்கள் அறிகிறோம். நீ எவராலும் வெல்ல முடியாத வல்லமை படைத்தவன் எனவே உனது குழந்தைகளை பலசாலிகாளக பார்க்கவே நீ விரும்புவாய். உன்னை வணங்கும் எங்களுக்கு நீயே பாதுகாவலன் நாங்கள் கேட்பதெல்லாம் எங்களை நூறு நூறாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் பெருக்கு. உன்னிடம் நாங்கள் சரணடைகிறோம்.

இந்த ரிக் வேத பாடல் ஒருதோத்திர பாடலாக மட்டுமல்லாது அந்தகால மக்களின் நிலையை படம் பிடித்து காட்டும் காலக் கண்ணாடியாகவும் இருக்கிறது. வேதப் பாடல்களை வடித்தெடுத்த இந்த மக்கள் தாங்கள் வாழும் பகுதியில் வாழ்ந்த மற்ற மனித கூட்டத்தோடு ஒற்றுமையாக இல்லை. அவர்களுடன் போராடிக் கொண்டே இருந்தனர் மனித எண்ணிக்கையும் அடிப்படையில் அன்றைய யுத்தத்தில்வெற்றி தோல்விகள் தீர்மாணிக் கப்பட்டதால் ஆள்பலம் தங்களுக்கு வேண்டுமென்று நெருப்பு தேவியிடம் பிரார்த்தனை செய்கிறான். இதில் இன்னொறு உண்மையும் மறைந்திருக்கிறது. நெருப்பு என்பது விரகுகளை மட்டுமே பற்றிக் கொண்டு எரியும் ஒரு பொருள்ளல்ல எல்லா உயிர்களிடத்திலும் உடம்பிற்குள் அக்னி மறைந்திருக்கிறது.

ஜனனத்தை அதிகப்படுத்தும் காமமும் ஒரு வகையில் நெருப்புதான் பித்த உடம்பு அதாவது சூடான உடம்பும் படைத்த மனிதனால் உடனுக்குடன் பிள்ளைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவே இந்த பாடல் அக்னியை போற்றும் பாடலாக மட்டும் அல்லாது இதை முறையிலான சந்தலயங்களோடு ஓதினால் மனித உடம்பில் வெப்பத்தை அதிகபடுத்தும் அதிர்வுகளும் நிறைந்துள்ளதை அனுபவத்தில் உணரலாம்.

இதனால்தான் வேத ரிஷி அக்னியை தந்தை என்று உணர்வு பூர்வமாக பாடுகிறான். அதனுடைய உறவையும் நெருக்கத்தையும் வேண்டுகிறான். எல்லா வெளிச்சங்களிலேயும் அக்னியை காண்கிறான். சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும், மின்னலும் அவனுக்கு அக்னி வடிவாகவே தெரிந்தது. அக்னியை பற்றி வேத பாடல் ஆசிரியர் கூறுவதை உபநிஷத ஞானி தத்துவ நோக்கில் நமக்கு காட்டுகிறான். இருட்டிலிருந்து உண்மைக்கு என்னை கூட்டிசெல்வாயாக பொய்யிலிருந்து என்னை மீட்டு செல்வாயாக அழிவிலிருந்து அழிவற்ற அமிர்த நிலைக்கு என்னை அழைத்து செல்வாயாக என்று அக்னி தேவனிடம் முறையிடும் உபநிஷத வாக்கியம் அக்னியை ஞான வடிவாக நமக்கு காட்டுகிறது.



யோகி ஸ்ரீ
ராமானந்த குரு

ரிக் வேதத்தின் இரண்டாம் மண்டலம் இந்திரனையும்மூன்றாவது பகுதி வருணனையும் நான்காவது வாயுவையும் பற்றி பேசுகிறது. அவையாவும் ஏறக்குறைய முதல்




மண்டல கருத்துகளை போலவே இருப்பதனால் இனி ஐந்தாம் மண்டலத் தில் சூரியனை பற்றிசொல் லப்பட்டிருப்பதைபார்ப்போம்.

வேத ரிஷி சூரியனை துதிக்கும் போது அவனுக்கு பல பெயர்களை சூட்டி மகிழ்கிறான். சூரியனை இருட்டின் பகைவன் என்றும் மனிதச் சோம்பலின் எதிரி என்றும் பாராட்டுகிறான். சூரியனை சோம்பலின் எதிரியாக காட்டுவதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

வேதகால மனிதன் சோம்பி இருக்க முடியாத நிலையில் இருந்தான். பகைவர்களிடமிருந்தோ கொடிய மிருகங்களிடமிருந்தோ சதாகாலமும் அவனை அபாயம் துரத்திக் கொண்டே இருந்தது. சூரியன் மறைந்து விட்டால் அவனது அச்ச உணவு அதிகபட்டது பாதுகாப்புணர்வு இன்னும் அதிகமாக தேவைப்பட்டது அதனால் அவன் இருட்டை வெறுத்தான் இருட்டை கிழித்தெரியும் பகலவனை வரவேற்றான். ஒளி தருகின்ற அனைத்து பொருட்களையுமே தனது நண்பனாக கருதி அன்பு செலுத்தினான் ஆராதனை செய்தான். இந்த உணர்வுகளை சூரியனை பற்றிய ரிக் வேதப் பாடல்கள் தெளிவாக காட்டுகிறது.

சூரிய தேவன் எல்லாம் தெரிந்தவன் சகலசக்திகளும் வாய்க்கப் பெற்றவன் பலவாறு வடிவம் கொண்ட உயிர்கள் அனைத்திற்கும் போதனை செய்யும் ஆசிரியரை போன்றவன் மனிதனுக்கு மட்டுமல்ல மிருகங்களுக்கும் அவன் உணவளிப்பவன். வைகரை பொழுதின் இவன் தலை உயர்த்தி பார்த்து விட்டாலே மனித மனங்கள் இன்பத்தின் எல்லையை தொட்டுவிடுகிறது. பசியை நீக்கும் நேரத்தை மட்டும் சூரியன் தருவதில்லை. ஞானமும் அறிவும் ஆற்றலும் பெறுகின்ற பொழுதையும் சூரியன் தருகிறான். சூரியனின் ஞானக் கதிர்கள் மனநிலத்தை ஆழ உழுது அறிவு பயிர்களை விதைக்கிறது. இதனால் புத்திசாலிகள் சூரியனை ஆராதிக்கிறார்கள்.தெய்வீகமான எண்ணங்களை வளர செய்பவன் மனச்சோர்வுகளை போக்க செய்பவனும் தானியங்களை செழிக்க செய்பவனும் சூரியனே ஆவான் என்று சூரியனை போற்றும் இந்த பாடல் மேலோட்டமாக பார்க்கும் பொழுது சாதாரணமாக நமக்கு தெரியும் ஆழமான சிந்தனையை செலுத்தினால் ஆதிகால இந்து எத்தகைய நுட்பம் வாய்ந்தவனாக இருந்தான் என்பது புலப்படும்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின்
முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ–டியூப் சேனலில்
பதிவிடப்பட்டுள்ளோம்.
நமது சேனலில் சென்று
முழுவதுமாக பார்த்து
பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை
செய்யும் நமது
சேனலை
Subscribe
like & share

# உங்களுக்கு இறைவனின் ஒரு கணநேரக் காட்சியை அளிப்பதே எனது விருப்பம்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "இறைவனை நீங்கள் ஒருபோதும் அறியாத காரணத்தினால், அவன் இல்லாத குறை எவ்வளவு பெரியது என்பதை உணராமல் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது. அவனுடன் ஒரு முறை நீங்கள் தொடர்பு கொண்டு விட்டால், பூவுலகிலுள்ள எதுவும் உங்களை அவனிடமிருந்து வேறு திசையில் திருப்பி விட முடியாது. எனது ஒரே விருப்பம் உங்களுக்கு இறைவனின் ஒரு கண நேரக் காட்சியை அளிப்பதே. ஏனெனில் அவனைப் பெற்று விட்டால், அதைவிட மேலான பேறு வேறொன்றுமில்லை. சாத்தான், "உலகம் முழுவதின் மீதான ஆதிக்கத்தை அளிப்பதாக ஒரு மகானுக்கு ஆசை காட்டினான். ஆனால் அவர், எனக்குப் பின்னாகப் போ சாத்தானே," என உரைத்தார்.

அதைவிட எல்லையற்ற மகத்தான அந்தப் பரம்பொருளையே அந்த மகான் பெற்றிருந்தார். இப்பூவுலகிலுள்ள எந்த ஓர் ஆசையையும் பூர்த்தி செய்வதைவிட இறைவனை அறிந்துகொள்வது அதிக மனநிறைவைக் கொடுப்பதாகும், உங்களுடைய மிகச்சிறந்த பொக்கிஷமான அவனை நீங்கள் பெற்றுள்ளபொழுது உங்கள் இதயத்தின் ஒவ்வொரு சிறு விருப்பமும் நிறைவேற்றப்படும். இது எனது சொந்த உண்மையான அத்தாட்சி. எனது விருப்பம் ஒவ்வொன்றையும் அவன் நிறைவேற்றினான். இப்பொழுது நான் பொருட்களை நாடுவதில்லை. அவையே என்னை நாடி வருகின்றன. இறைவன் தன்னையே உங்களுக்குத் தந்துவிட்டால், அவன் உங்களுடைய மிகச் சிறிய விருப்பதையும் நிறைவேற்றுவான். கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நீங்கள் விரும்புவது அவ்விதமான நிலையே. ஆனால் முதலில் அவனுடைய பரிசுகளுக்கும் மேலாக அவனையே நீங்கள் விரும்புகிறீர்கள் என்பது நீங்கள் நிரூபிக்க வேண்டும்."

மேலும் அவர் கூறுகிறார்: "இறைவன் எனக்கு அளித்துள்ள ஏராளமானவற்றில் எனக்கென எதையும் நான் வைத்துக்கொள்ளவில்லை. நான் என்றும் சுதந்திரமானவன்; ஏனெனில் எதுவுமே எனக்குச் சொந்தமில்லை. நான் அவனுக்காகவும், உங்கள் அனைவருக்காகவும் மட்டுமே செயற்படுகின்றேன். இதன் காரணமாகத்தான், எதாவதொரு தேவையின் எண்ணம் என் மனதில் எழுந்ததும், இறைவன் அதைப் பூர்த்தி செய்கிறான். இறைவனிடம் மானசீகமாக எதைச் சொல்கிறேன் என்பதைப்பற்றி நான் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அது நிச்சயமாக நிறைவேறும்! இவ்வகையான மனநிறைவை எந்த ஒரு உலகச்செல்வமும் அளிக்க முடியாது. இறைவன் உங்களை நாடுகின்றான்; நீங்கள் அவனை நாட வேண்டும். இந்த ஸெல்ஃப் ரியலைசேஷன் யோகதா சத்சங்க மார்க்கத்தைப் பின்பற்றுங்கள்.

வேறெந்த மார்க்கத்தையும் விட, விரைவாக அது உங்களை அவனிடம் கொண்டு செல்லும். நான் எல்லா மார்க்கங்களையும் முயன்றுள்ளேன். உணர்ச்சியின் அடிப்படையில் அல்லாது, பகுத்தறிவின் அடிப்படையில் நான் இந்த




www.aanmeegamalar.com

## 107 பாகம்

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

### மனித வாழ்வு மேம்படுவதற்காக


குருப்ரியா

மார்க்கத்தினுள் நுழைந்தேன். தங்களுடைய சொந்த அனுபூதியின் நிரூபணம் மூலம் ஸெல்ஃப் ரியலைசேஷன் ஃபெலோஷிப் (யோகதா சத் சங்க சொஸைடி ஆஃப் இந்தியா) பின் மாபெரும் குருமார்கள், அவர்கள் வழியை பின்பற்றுவதனால் நீங்களும் இறைவனைக் காணலாம் எனவும் எப்படி ஒரு தலைசிறந்த விஞ் ஞானியிடம் கற்றுக்கொண்டு, உங்களை ஈடுபடுத்திக்கொண்டால் ஒரு தலைசிறந்த விஞ்ஞானியாக நீங்கள் ஆகமுடியுமோ, அதுபோல் நீங்களும் ஆன்மீகத்தில் சிறந்தவர்களுள் சிறந்தவராக ஆக முடியும் என்பதையும் காண்பித்துள்ளனர்.

கரிக்கட்டி சூரிய ஒளியைக் கிரகித்து அதைப் பிரதிபலிப்பதில்லை. ஆனால் வைரம் அவ்வண்ணம் செய்கிறது. முழுவதுமாக சந்தேகங்களும், முடியாது என்ற மனோ நிலையும் ஆன்மீகச் சோம்பலும் நிறைந்துள்ள கரிக்கட்டி போன்ற மனப்பாங்கு உடையோர், இறைவனை கிரகிக்க முடியாது. ஆனால் சிரத்தையும், முழு நம்பிகையும் விடாமுயற்சியும் உள்ள வைரம் போன்ற மனப்பாங்கு உடையோர், தெய்வீக உணர்வு நிலையின் ஞானத்தைக் கிரகித்து, அதைப்பிரதிபலிக்கிறார்கள்," என்கிறார் குருதேவர்.

இதற்கு ஓர் உதாரணத்தைக் குறிப்பிட விழைக்கின்றேன். அது மகாபாரதத்தில் விதுரர் திருதராஷ்டிரருக்குக் கூறிய கருத்து. அவர் கூறுகிறார்: "இரவில் பசியின்றி வாழ என்ன தேவையோ, அதை பகல் காலத்திலேயே சம்பாதித்து விட வேண்டும்; மழைக்காலத்தில் என்ன தேவைப்படுமோ, அதை மற்ற மாதங்களில் சம்பாதித்துக்கொள்ள வேண்டும்; முதுமை அடைந்தபிறகு நிம்மதியாக வாழ்வதற்கு என்ன தேவையோ, அதை இளமைப் பருவத்திலேயே சம்பாதித்துக்கொள்ள வேண்டும். இந்த உலகை விட்டு நாம் செல்கிறபோது நமக்கு நிம்மதியை அளிக்கத்தக்கது எதுவோ அதை உயிருள்ள அளவும் சம்பாதித்துக்கொண்டே இருக்க வேண்டும்."

"பிரஜைகளின் பிறப்பு, நதிகளின் மூலம் பெரிய மகான்களுடைய குலம் பெண்களுடைய சென்றகால சரித்திரம் ஆகியவற்றைப்பற்றி மிகவும் விரிவாக விசாரிக்கக்கூடாது. அப்படி விசாரிக்கத் தொடங்கினால் இவர்களால் கிடைக்கக்கூடிய நற்பயன்கள் உலகிற்குக் கிடைக்காமல் போகும் அளவிற்கு அவர்களைப்பற்றிய மனக்குழப்பம் ஏற்படும்."

ஆத்ரேயர் என்ற உன்னத மனிதருக்கும் சில தேவர்களுக்கும் நடந்த விவாதத்தை விதுரர் திருதராஷ்டிரருக்கு விளக்கினார்; "பேச்சைப்பற்றிய இலக்கணம் நான்காக இருக்கிறது. முதலாவது பேசுவதைக் காட்டிலும் பேசாமலிருப்பது மேல். இரண்டாவது பேசித்தான்தீரவேண்டும் என்றால் உண்மையையே பேச வேண்டும். மூன்றாவது உண்மையையே பேசும்போதும் சரி. அது மற்றவர்களுக்கு அன்பான வார்த்தையாக இருந்தால்தான் பேச வேண்டும். நான்காவது உண்மையாகவும் அன்பான வார்த்தையாகவும் இருந்தால் மட்டும் போதாது; அது தர்ம நியாயத்திற்குக் கட்டுப்பட்ட சொல்லாகவும் இருக்க வேண்டும். தனது பேச்சில் இந்த நான்கு விஷயங்களைக் கவனத்தில் வைத்துக் கொள்கின்றவன் வித்வான் ஆகிறான்."

"மனிதர்களை மேலான வர்கள் இடைப்பட்டவர்கள், கீழானவர்கள் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். பிறரைக் கெடுக்க எண்ணம் கொள்ளாமல் எல்லோருக்கும் நல்லதையே நினைத்து, தன்னை நிந்தித்தவனையும்கூட நிந்திக்காமல் மற்றவர்களை வருத்தாமல், அடக்கம் உள்ளவனாகவும் சத்தியத்தையே பேசுகிறவனாகவும் எவன் விளங்குகிறானோ அவனே உயர்ந்த மனிதன்; பயன் இருந்தால் மட்டும் அன்பாகப் பேசுகிறவன் யாருக்காவது ஏதாவது கொடுப்பதாக வாக்குக் கொடுத்தால் அதைக் கொடுத்துவிடுகிறவன், பிறருடைய குற்றத்தை மனதில் மட்டும் வைத்துக்கொள்கிறவன் இவன் இடைப்பட்ட மனிதன் கெட்ட எண்ணம் கொண்டவனும், தகாத காரியங்களிலேயே மனதைச் செலுத்துபவனும், நன்றி மறந்தவனும், எப்பொழுதும் கோபத்திலேயே ஈடுபட்டிருப்பவனும் எவனோ, அவன்கீழானவன். இவன் தன்னையும் நம்புவதில்லை; பிறரையும் நம்புவதில்லை. இவனுக்கு நண்பர்கள் கிடையாது. இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டிருக் கும் மனிதர்கள், எப்பொழுதும் மேலான மனிதர்களையே அணுக வேண்டும். ஆபத்து காலங்களில், வேறு வழி இல்லாமல் போகிற நிலையில் இடைப்பட்ட மனிதர்களை அணுக லாம். ஆனால் எந்தக் காரணம் கொண்டும் மூன்றாவதாகிய தாழ்ந்த மனிதர்களை அணுகிவிடக்கூடாது. அது நாசத்தைத்தான் விளைவிக்கும்.

மேலும் விதுரர் கூறுகிறார்; "யார் நமக்கு நண்பன் என்பதை நாம் நன்றாகத் தெரிந்து

கொள்ளவேண்டும். ஒருவனுடைய கோபத்திற்கு நாம் பயப்பட வேண்டியிருந்தால், அவன் நமக்கு நண்பனாகமாட்டான். ஒருவன் தவறாக நினைத்துக்கொள்வானே என்று சந்தேகப்பட்டு அவனுக்கு உபசாரம் செய்ய வேண்டிய நிலையில் நாம் இருந்தால் அவனும் நமக்கு நண்பனாகமாட்டான். தந்தையிடம் அரவணைப்பும், ஆறுதலையும் பெறுவதுபோல், எந்த ஒருவனிடத்தில் நாம் அரவணைப்பையும், ஆறுதலையும் அடைவோமோ அவனே நமக்கு நண்பன். மற்றவர்கள் பெயருக்காக உடன் வந்துவிட்ட சேர்க்கைகள். எந்த ஒரு குறிப்பிட்ட காரணத்திற்காகவும் நம்மோடு பழகாமல் நட்பிற்காக மட்டுமே எவன் ஒருவன் நம்முடன் இருக்கிறானோ அவனே உண்மையான உறவினன்; அவனே நண்பன்; அவனே மேலான நிலையிலுள்ளவன்.”

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களுக்கிடையில் நல்ல நண்பனைப் பார்ப்பதற்கு மிகவும் அரிது.

நண்பனைத் தேர்ந்தெடுப்பதில் நாம் தோல்வியுற்றால் அது மிகப்பெரிய சிக்கலில் முடியும். ஆனால் அந்த நட்பும் உறவும் நன்றாக, இருப்பது இறைவனிடத்தில மட்டும்தான்.

அதனால்தான் குருதேவர் “இறைவனைத் தேடுங்கள்” என்று இடையறாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதுமட்டுமின்றி “உங்களுக்கு நானே ஒரு கண நேரமாவது இறைவனுடைய காட்சியை அளிப்பதே என்னுடைய ஒரே விருப்பம்” என்று அவர் கூறியுள்ளார்.

இறைவன் மட்டுமே அனைத்திற்கும் மேலானவன். ஒரு நண்பன் நம்மைக் கைவிட்டால் நமக்கு வேறு கதியேயில்லை என்று வருத்தப்படுவோம். ஏன் அவ்வாறு வருந்த வேண்டும். நேராகவே இறைவனைத் தொடர்புகொண்டு அவனுடன் உண்மையாக உறவாடும்பொழுது அவன் வருவான். அதற்காக குருதேவர் உதவிபுரிவார். அதைத் தொடர்ந்து நண்பர்களும் வருவர் உறவினர்களும் வருவர். அவனைத் தொடர்பு கொள்ளாத நிலையில் நமக்கு நல்ல நண்பர்கள் கிடைப்பது மிகவும் கடினம். எனவே குருதேவரே இறைவனைக் காட்டுகிறேன் என்று முன்வருகிறார்.

அந்த நிலையில் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாம் அவருடைய அறிவுரைகளை நன்கு செவிமடுத்து செயல்படவேண்டும். அப்பொழுது இறைவனுடைய அன்பையும் ஆதரவையும் குருதேவர் பெற்றுத் தருவார். நாம் ஒவ்வொருவரும் குருதேவருடைய பொன்னான வார்த்தைகளை நம்புவோம்! செயல்படுவோம் ! அனைத்தும் இறைவனே என்பதை உணருவோம்!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033



# ஓம் நமசிவாய நாமம்

## ஒரு மணி நேரம் சொன்னால்

www.aanmeegamalar.com




| | |
|---|---|
| 1. | நீங்கள் மௌன விரதம் இருப்பதாகிறது. |
| 2. | ஒரு மணி நேரம் நீங்கள் இறைவனுக்கு சமமாக வாழ்ந்ததாகிறது. |
| 3. | ஒரு மணி நேரம் ஹரிச்சந்திரன் போல் உண்மையை பேசியதாகிறது. |
| 4. | ஒரு மணி நேரம் நீங்கள் உங்கள் மரணம் என்கிற பரிக்ஷைக்கு தயார் செய்தீர்கள் என்று ஆகிறது. |
| 5. | ஒரு மணி நேரம் பூஜை செய்ததாகிறது. |
| 6. | ஒரு மணி நேரம் உங்கள் பாவத்தை போக்கி கொள்ள பிராயசித்தம் செய்ததாகிறது. |
| 7. | ஒரு மணி நேரம் இறைவனை நோக்கி சில படிகள் முன்னேறியதாகிறது |
| 8. | ஒரு மணி நேரம் வேதம் ஓதுவதாகிறது. |
| 9. | ஒரு மணி நேரம் பெரியோர்கள் சொல் பேச்சு கேட்டதாகிறது. |
| 10. | ஒரு மணி நேரம் நீங்கள் பக்தராகிறீர்கள். |
| 11. | ஒரு மணி நேரம் நீங்கள் மஹான்களால் ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள். |
| 12. | ஒரு மணி நேரம் உங்கள் புலன்களை ஜெயித்தவர்கள் ஆகிறீர்கள். |
| 13. | ஒரு மணி நேரம் தியானம் செய்தவர் ஆகிறீர்கள். |
| 14. | ஒரு மணி நேரம் சமாதியில் உள்ளவர் ஆகிறீர்கள். |
| 15. | ஒரு மணி நேரம் ஒழுக்கமானவனாக ஆகிவிடுகிறீர்கள். |
| 16. | ஒரு மணி நேரம் Positive ஆக இருக்கி றீர்கள். |
| 17. | ஒரு மணி நேரம் உங்கள் போலித்தனமான வாழ்க்கையில் இருந்து விடுதலை அடைகிறீர்கள். |
| 18. | ஒரு மணி நேரம் பாண்டுரங்கன் உங்கள் கை யை பிடித்துக்கொண்டு இருக்கிறான். |
| 19. | ஒரு மணி நேரம் நீங்கள் பாதுகாக்கப் படுகிறீர்கள். |
| 20. | ஒரு மணி நேரம் உங்களுக்கு தெரியாமல் உங்களை கோவிந்தன் ரசித்துக்கொண்டு இருக்கிறான். |
| 21. | ஒரு மணி நேரம் மஹான்கள் வாயில் வந்த நாமத்தை நாமும் சொல்வதால் அவர்களுடைய பிரசாதத்தை உண்டவர்கள் ஆகிறீர்கள். |
| 22. | இந்த ஒரு மணி நேரத்தினால் இறைவன் நீங்கள் செய்த தவறுகளை மறந்து நிற்கி றான். |
| 23. | ஒருமணி நேரம் யாகம் செய்தவராகிறீர்கள். |
| 24. | ஒரு மணி நேரம் பகவானையே நீங்கள் கடனாளி ஆக்குகிறீர்கள். |
| 25. | ஒரு மணி நேரம் நீங்கள் கங்கையில் குளித்தவர் ஆகிறீர்கள். |
| 26. | ஒரு மணி நேரம் யமுனையில் குளித்தவர் ஆகிறீர்கள். |
| 27. | ஒரு மணி நேரம் காவிரியில் குளித்தவர் ஆகிறீர்கள். |
| 28. | ஒரு மணி நேரம் பிருந்தாவன மண்ணில் உருண்டு பிரண்டவர் ஆகிறீர்கள். |
| 29. | ஒரு மணி நேரம் கோடி கோடியான புண்யத்தை சம்பாதிகிறீர்கள். |
| 30. | எல்லாவற்றிற்க்கும் மேல் நாமம் வேறு இல்லை பகவான் வேறு இல்லை ..அந்த ஒரு மணி நேரம் இறைவனே உங்கள் நாக்கில் எச்சில் பட்டு கட்டுண்டு இருக்கிறான்... |

www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# aanmeegamalar.com

# ஒரு பாலம் மட்டுமே

**நமது நோக்கம் வேறு...**
**25,000 வாசகர்களும் தானாக சேர்ந்த வாசகர்கள்**

**நமது இதழ் போட்டி இதழ் அல்ல அதேசமயம் மற்றவர்களுடன் போட்டியிட விரும்பவில்லை?**

**மற்ற ஆன்மிக இதழைப் போன்று பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில் நமது இதழ் நடத்தப்படவில்லை....**

- இந்து மதத்தில் வெளிவராத ஆன்மிக செய்திகளையும், மற்ற ஆன்மிக இதழ்களில் வெளியிடாத அற்புதமான செய்திகளை தரும் இதழாகவே நமது "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" வெளிவருகிறது.
- வியாபார நோக்கமோ... விளம்பர நோக்கமே நமது இதழுக்கு இல்லை... முற்றிலும் இலவசமாகவே வெளியிட்டு வருகிறோம்... நன்கொடை பெறாமல் முற்றிலும் ஆன்மிக சேவையாகவே செய்து வருகிறோம்.
- விரும்பி கேட்கும் அன்பர்களுக்கு மட்டுமே இ–மெயில் மற்றும் வாட்சப் மூலம் அனுப்பி வைக்கிறோம். இதுவரை வெளிவந்த நுற்றுக்குமேற்பட்ட இதழ்களை இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கும் வகையில் aanmeegamalar.com இணையதளத்தில் வெளியிட்டுள்ளோம்.
- 25,000த்திற்கும் மேற்பட்ட வாசகர்கள், அவர்களாக விரும்பி நமது இதழை படித்து பயன்பெறுகின்றனர். இதில் குறிப்பாக வெளிநாட்டில் வசிக்கும் ஆன்மிக அன்பர்கள் அதிகம்.
- நமது இதழ் மற்ற ஆன்மிக இதழுக்கு போட்டியாக வெளியிடவில்லை. அதே சமயம் மற்ற ஆன்மிக இதழ்கள் போன்று விளம்பரம் வாங்கி நடத்தப்படவில்லை. விளம்பரத்திற்காக மற்ற மதக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை.
- நாங்கள் இந்து மதத்திற்கு மட்டுமே சேவை செய்வதால் விளம்பரத்தை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்வதில்லை.
- இந்துமதக் கருத்துக்கள் மட்டுமே நமது இதழில் வெளிவருகிறது. யாருக்கும் கட்டாயப்படுத்தி நமது இதழை இணையதளம் வாயிலாக அனுப்புவதில்லை, இந்துமதக் கருத்துக்களையும், மேன்மைகளையும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் விருப்பப்பட்டு படிக்க மட்டுமே நாங்கள் பாலமாக இருந்து வருகிறோம்.
- ஆன்மிக கருத்து, கோவில்களின் வரலாறு, தத்துவங்கள், ஆன்மிக பெரியோர்களின் ஞான உபதேசம், ஆன்மிக கதைகள் போன்றவை அனைவருக்கும் பொதுவானது. இவற்றிற்கு எவரும் உரிமை கோர முடியாது. இந்து மதம் யாருக்கும் காப்பிரைட் சட்டப்படி பதிவிடவில்லையென்பதை கருத்தில் கொள்ளவேண்டும்.
- மற்ற வளர்ந்த ஆன்மிக இதழ்களுக்கு நாங்கள் போட்டியல்ல... அதே சமயம் ஆன்மிகத்தின் பெயரில் சம்பாதிக்கும் எண்ணமும் எங்களுக்கு இல்லை...
- இதுவரை வெளிவந்த இதழ்களை முழுவதுமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தில் சென்று இ–புத்தகம் பிரிவில் இலவசமாக டவுன்லோடு செய்து படிக்கலாம். மற்ற இதழ்களைப் போன்று சப்ஸ்கிரைப் செய்தால்தான் படிக்க முடியும் என்று கட்டாயப்படுத்துவதுமில்லை.

**நமது இதழில் உள்ள கருத்துக்களை யார் வேண்டுமானாலும், எந்த சமயத்தில் வேண்டுமானாலும் இலவசமாக பயன்படுத்திக் கொள்ளலாம்.**

– ஆசிரியர், தொடர்பு எண் 9444228203

12-ம் பக்க தொடர்ச்சி

## அம்பாளுக்குரிய 64 வகை உபசாரங்கள்

46. இதரகரேபுண்ட்ரேக்ஷுசாபம் வேறொருகையில் நாமக்கரும்பு.
47. அபரகரேபுஷ்பபாணம் மற்றொருகையில் புஷ்பபாணங்கள்.
48. ஸ்ரீமன்மாணிக்க பாதுகே ரத்னமயமான மிதியடிகள்.
49. ஸ்வஸமான வேஷாபிஃ ஆவரணதேவ தாபி: ஸஹ மஹா சக்ராதிரோஹணம் தன்னைப்போலவே இருக்கும் ரூபத் துடன்கூடின ஆவரண தேவதை களுடன் மஹாசக்ரத்தில் ஏறி இருத்தல்.
50. காமேஸ்வராங்கபர்யங்கோபவேசனம் காமேச்வரனுடைய இடது பாகமாகிற கட்டிலில் இருத்தல்.
51. அம்ருதாஸவ சஷகம் பானம் செய்யும் அம்ருதத்தோடு கூடிய பாத்திரம்.
52. ஆசமனீயம் ஆசமனம்.
53. கற்பூர வீடிகா பச்சை கற்பூரம் சேர்ந்த பாக்குடன் கூடின பீடா, (செய்விதம் ஏலக்காய், லவங்கம், பச்சை கற்பூரம், கஸ்தூரி, பாக்கு, கொப் பரை, திப்பிலி, சுக்கு, கருங்காலி, இவைகளின் பொடிகளுடன் சுண்ணாம்பு சேர்த்த வெற்றி லையை மேருபோல் செய்வது.)
54. ஆனந்தோல்லாஸவிலாஸஹாஸம் ஆனந்த களிப்பில் ஏற்பட்ட சிரிப்பு
55. மங்களாரார்த்திகம் தங்கம்முதலான பாத்திரங்களில் ஏற்றும் மாவிளக்கு தீபம்.
56. சத்ரம் குடை.
57. சாமரயுகளம் இரண்டு வெண்சாமரங்கள்.
58. தர்பணம் கண்ணாடி.
59. தாளவ்ருந்தம் விசிறி.
60. கந்தம் சந்தணம்.
61. புஷ்பம் பூ
62. தூபம் சாம்பிராணிதூபம்
63. தீபம் நெய்தீபம்.
64. நைவேத்யம் நிவேதனம்.




# வருடத்தில் 120 நாட்கள் மனிதர்களுக்கு மற்ற நாட்கள் தேவர்களுக்கு அருளும் ஐயப்பன்

**சபரிமலையில் ஐயப்பனைச் சுற்றி எப்போதும் ரிஷிகளும் யோகிகளும் இருந்து கொண்டிருக் கிறார்கள், சபரிமலை ஒரு மகா யோகபீடமாகும். அங்கே பகவான் யோக நிலையில் தவம் செய்து கொண்டிருக்கிறார்.**




**ஆதிகாலத்தில், மகர விளக்கு வைபவத்துக்கு மட்டும்தான் சபரிமலை கோவில் திறக்கப்பட்டது. அந்த நாளில் பகவான் யோக நிலையில் இருந்து வெளி வந்து தனது கண்களைத் திறந்து தரிசனம் தருவதாக ஐதீகம் உண்டு. ஆண்டுகள் கடந்தன. பக்தர்கள் கூட்டமும் அதிகரித்தது. கோவில் நிர்வாகிகள் பகவானிடம் தேவ பிரசன்னம் கேட்டு உத்தரவு பெற்று 5 நாட்கள், பின்னர் 41 நாட்கள், அதன் பின் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை, இப்போது மாதம் ஒருமுறை என்று கோவில் திறக்கப்பட்டு வருகிறது. ஒரு வருடத்தில் பக்தர்களுக்கு 120 நாட்கள் மீதம் உள்ள நாட்கள் தேவர்களுக்கு என்ற அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது பெரியோர்கள் சொல்லும் கருத்து.**

# சூறையாடப்படும் இந்துமதம், இந்துக் கோவில்கள்


## வெள்ளைக்காரர் எழுதிய நூலில் அம்பலம்

பொதுவாக இந்தியாவில் உள்ளவர் ஒரு கருத்தை சொன்னால், இந்தியர்கள் பெரும்பாலும் நம்ப மாட்டார்கள், ஆனால் வெள்ளைக்காரன் சொன்னால் அப்படியே கேட்டுக்கொள்வார்கள். அந்த வகையில் சமீபத்தில் ஜக்கி வாசுதேவ் அவர்கள், "கோவில்களில் நடைபெறும் அத்துமீறல்களைப் பற்றி கூறும்போது பலதரப்பினர் எதிர்த்தனர். ஆனால், வெள்ளைக்காரனே இந்தியாவில் குறிப்பாக தென்னிந்தியாவில், அதுவும் தமிழகத்தில் உள்ள கோவில்களில் நடைபெறும் அத்துமீறலை புத்தகமாக எழுதி வெளியிட்டுள்ளார். "வெள்ளைத்தோல்காரன் பொய் சொல்லமாட்டான்" என வடிவேல் பாணியில் கூறுபவர்கள் இந்த புத்தகத்தை வாங்கி ஒருமுறை படித்துப்பாருங்கள். முடிந்தால் ஜக்கிவாசுதேவை எதிர்த்தவர்களுக்கு இப்புத்தகத்தை ஒரு பார்சல் அனுப்பிவிடுங்கள்.

அமெரிக்காவைச் சேர்ந்தவர் ஸ்டீஃபன் நேப் (Stephan knapp) இவர் பல்வேறு இந்து மதம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். இதில் இந்துக்களுக்கு எச்சரிக்கை தரும் ஒரு புத்தகமும் அடக்கம். 'Crime Against India and Need to Protect Ancient Vedic Traditions' இந்த புத்தகத்தில் "அழிவு நிலையில் இந்துக்களும் – இந்துக் கோவில்களும் உள்ளன, இந்த அழிவிற்கு துணையாக இருப்பது இந்துக்களே!" என்று குறிப்பிட்டுள்ளார் ஸ்டீஃபன் நேப்.

இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ள சாராம்சப்படி பார்த்தால், 'இந்தியாவுக்கு எதிரான குற்றமும், பழம்பெரும் வேதக் கலாச்சாரத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியமும்' குறித்து ஆராய்ச்சி செய்து இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். அமெரிக்காவில் வெளிடப்பட்டுள்ள இப் புத்தகம், இப்போது விற்பனை வசூலை வாரிக் குவித்து வருகிறது.

இப்புத்தகத்தில் அவர், தென் இந்தியாவில் உள்ள, ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பழைமையான இந்துக் கோவில்கள் எப்படி, மக்களாட்சியில். அரசாளும் அரசியல்வாதிகளால். மிகவும் நலிவடைந்து விட்டன. என்பதைப் "புட்டு புட்டு" வைக்கிறார்.




ஸ்டீஃபன் நேப்

www.aanmeegamalar.com

இப்போது, "மதச் சார்பற்ற நாடு" என்று சொல் லிக் கொள்ளும் இந்தியாவில்...

இஸ்லாமுக்கும், கிறித்தவத்துக்கும் உள்ள சலுகைகள்... இந்து மதத்துக்கு இல்லாமல் போனது எப்படி? என்னும் துயரத்தை நன்றாக விளக்குகிறார்.

இன்று, சில பல சுயநல காரணங்களுக்காக மாற்று மதத்தினரிடம். அரசியல்வாதிகள் அடங்கி போகிறார்கள்.

இன்றைய நிலையில் சிறுபான் மையினரின் வழிபாட்டு தலங்கள் அந்தந்த மதத்தினரால் பராமரிக்கப் படுகின்றன.

ஆனால், புராதன இந்துக் கோவில்களோ, 1951–ம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட, "இந்து மத மற்றும் தர்மஸ்தாபனங்கள் சட்டப்படி" (Hindu religious and charitable endownments Act) அரசால் எடுத்துக்கொள்ளப் பட்டு விட்டன.

மதச் சாற்பற்ற அரசின் அதிகாரிகள், ஒவ்வொ ருக் கோவிலின் நிர்வாகத்திலும், ஆகம விஷ யங்களிலும், அவற்றின் சொத்துக்களைக்கையாள் வதிலும், தங்கள் "மூக்கை நுழைக்க" ஆரம் பித்து விட்டனர். இந்த இடையூறு, மற்ற மத வழி பாட்டுத் தலங்களுக்குக் கிடையாது." இவ்வாறு, தெளிவாக சொல்கிறார் ஸ்டீஃபன் நேப்.

மேலும் அவர்,

"ஹிந்துக் கோவில்கள் எல்லாமே, பழங்காலத்தில் இருந்த அரசர்களால்கட்டப் பட்டதாகும். அவைகளுக்கு சொத்துக்களை யும், ஆபரணங்களையும், அவர்கள்தான் விட்டுச் சென்றிருக் கிறார்கள். அவர்கள் பரம் பரையினர், தங்களுக்கு, இக் கோவில்களில் உரிமை ஏதும் இருப்பதாகக் கோரவில்லை.

இப்போது உள்ள ஜனநாயகத்தில்...

இத்தகையக் கோவில்கள் ஒன்று கூடக் கட்டப்படவில்லை. அப்படி இருக்கும் போது, தங்களுக்குக் கொஞ்சமும் உரிமை இல்லாத இவ்விஷயத்தில்... அரசு எப்படி நுழைந்து.? எப்படி இந்து மத வழிபாட்டுத் தலங்களில் தலையிட முடியும்?" என்றும் கேட்கிறார்.

ஆந்திராவில் உள்ள 43,000 இந்து கோவில் களின் ஆண்டு வருமானத்தில், 18%தான், இக்கோவில்களுக்கு செலவழிக்கப்படுகிறது.

மிச்சமுள்ள 82%, அரசின் மற்ற நிர்வாகச் செலவுகளுக்குத் தாரை வார்க்கப் படுகிறது.

திருப்பதி ஸ்ரீ வேங்கடாசலபதியின் ஆண்டு வருமானம் 3,100 கோடி ரூபாய். இதில், 83% அரசு எடுத்துக் கொள்கிறது. ஆந்திர அரசு, 10 புராதனக் கோவில்களை இடித்து... ஒரு "கால்ஃப்" மைதானம் கட்டுகிறது.

இதைப் போல, 10 மசூதிகளையோ, மாதா கோவில்களையோ இடிக்க எண்ணியிருந்தால் என்ன ஆகி இருக்கும்?" இவ்வாறு கேட்கிறார் ஸ்டீஃபன் நேப்.

சிந்திக்க வேண்டிய கேள்வி.

கர்நாடகாவில், இந்துக் கோவில்கள் மூலம் ஆண்டுக்கு வரும் 79 கோடி வருமானத்தில்... 7 கோடியை மட்டுமே இக்கோவில்களின் பராமரிப்பு களுக்கு அரசு செலவிடுகிறது.

இதில் வயிற்றெரிச்சல் என்னவென்றால்... 59 கோடியை, ஹஜ் யாத்திரைக்குத் திருப்பி விடப் படுகிறது என்பதுதான். மேலும் இதில், 13 கோடி ரூபாயை சர்ச்கள் பராமரிப்புக்காக அளிக்கிறது அரசு.

"ஊரான் வீட்டு நெய்யே: என் பெண் டாட்டி கையே" என்பது இது தான்.

நிதி இல்லாமல்... இதுவரை 50,000 ஹிந்துக் கோவில்கள் மூடிக் கிடக்கின்றன.

இதுவும், ஸ்டீஃபன் நேப்பின் "கூர்நோக்கு" தான்.

கேரளாவில் உள்ள குருவாயூர் ஸ்ரீ கிருஷ்ணன் கோவில்வருமானத் தை... அங்குள்ள ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்கக் கூட



தான் எழுதி வெளியிட்ட புத்தகங்களுடன் ஸ்டீஃபன் நேப்

நிதி இல்லாமல், அனைத்தையும் சுரண்டிக் கொண்டு போய் விடுகிறார்கள் அரசு தரப்பு.

மேலும், இப்போது 'உள் நுழைவு டிக்கெட்டின்' இமாலய விலை இதுபற்றி எவரும் எதிர்த்துபேசாதது கூடவருத்தமளிக்கிறது. சபரிமலை ஐயப்பன்கோவிலைச்சுற்றியிருக்கும் வனத்துறைக்கு சொந்தமான ஆயிரக்கணக் கான ஏக்கர்கள் கொண்டக்காடுகளைகிறித்தவர்களுக்குக் கொடுத்து, காட்டை அழித்து வருகிறார்கள்.



கீதா-ராஜன்

இப்போதுள்ள,“திருவாங்கூர்கொச்சி சுயாட்சி தேவஸ்வம் போர்டை” ஓர் அவசரச் சட்டத்தின் மூலம், 'கலைத்து விடலாமா?' என்று கூட அரசுஎண்ணி வருகிறது. இதுவும் ஒரு அமெரிக்கப் கிறிஸ்த வரின் பகுப்பாய்வு தான்.

நிச்சயமாக, ஸ்டீஃபன் நேப் ஒரு ஹிந்து அல்ல. இது போல, ஒரிஸ்ஸாவில் உள்ள மிகப் புகழ் பெற்றத் தலமான, பூரி ஜகந்நாதருக்குச் சொந்தமான 70,000 ஏக்கர் நிலத்தை அரசு “ஸ்வாஹா” செய்து விட்டது... என்றும்,

மஹாராஷ்ட்ராவிலும் சுமார் 4 லட்சம் கோவில்கள் நலிவு அடைந்து விட்டதாகவும் வருத்தத்துடன் விவரிக்கிறார்.

நமது தமிழகத்தைப் பற்றிக் கேட்கவேவேண்டாம், இந்து அற நிலைய சொத்துக்கள் எப்படியெல்லாம் அழிந்து வருகின்றன... என்றும், கோவில்களுக்கு வர வேண்டிய வருமானம் வசூலிக்கப் படுவதே இல்லை... என்றும், மண்டபபங்களோ, மதில்களோ, திருக் குளங்களோ, கொஞ்சம் கூடப் பராமரிக்கப் படுவதில்லை... ஆலய ஊழியர்களுக்கு சம்பளம் முறைப்படி வழங்கப்படுவதில்லை... அரசு அதிகாரிகள், கோவில் சொத்துக்களை தங்கள் இஷ்டம் போல விற்று, வேறு காரியங்களுக்குச் செலவலிப்பது பற்றியும், புள்ளி விவரங்களுடன் ஸ்டீஃபன் நேப் விளக்குகறார்.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் ஏற்பட் டுள்ள ஜனநாயக ஆட்சியில், இந்து மத ஆலயங் களுக்கு நிகழ்ந்துள்ள இந்தக் கதிக்கு காரணம், இந்துக்களின் விழிப்புணர்வு இல்லாத நிலையும், அரசியல்வாதிகளின் ஊழல் மனப் பான்மையும், ஊடக்ங்களின் இந்து எதிர்ப்பு சதியும் முக்கியக் காரணங்களாகக் கூறுகிறார் இவ்வாசிரியர்.

இனியாவது விழிப்படையுங்கள். நம் ஆலயங் களில், அரசின் குறுக்கீடுகளைக் களைத்தெறியப் பாடுபடுங்கள். ஊருக்கு மட்டும் உபதேசம் செய்யும் பிரிவினைவாதிகள் பேச்சைக் கொஞ்சம் கூடக் கேட்காதீர்கள். ஒவ்வொரு ஊரிலும் நடக்கும் இந்துக் கோவில்களுக்கும எதிராக நடக்கும் தவறுகளை அம்பலப் படுத்துங்கள். கட்சி பாகுபாடு இன்றி ஒற்றுமையுடன் தட்டிக் கேளுங்கள். இனிவரும் காலத்திவாவது. நமது இந்து மதத்தை காப்பாற்ற முன் வாருங்கள்.


அமெரிக்காவில் வசிக்கும் ஒரு நபர் இந்து மதமும், இந்துக் கோவில்கள் அழிந்து வருவதை வெளிப்படையாக புத்தகமாக வெளியிட்ட பின்பாவது இந்தியாவில் உள்ள இந்துக்கள் விழிப்பு அடையவில்லையென்றால், வருங்காலங்களில் இந்துமதம் இந்தியாவிலேயே சிறுபான்மை மதமாக மாறினாலும் ஆச்சரியமில்லை.

-தொகுப்பு: கீதாராஜன், சென்னை

## 7 கோடி மரணங்கள் நிகழும்.... பாதுகாப்புடன் இருப்பதே தீர்வு....

பஞ்சாங்கத்தில் வக்ர நிர்ணயம் என்ற ஒரு பலன் உள்ளது அந்தப் பலனின் படி, குருபகவான் ஒரே வருடத்தில் 3 ராசிகளில் பிரவேசம் செய்யக் கூடாது, அப்படி செய்தால் பூமியில் 7 கோடி மரணங் கள் நிகழும் என்று தெளிவாக நமது முன்னோர் வகுத்து கூறியுள்ளனர்.

தற்போது அந்த நிகழ்வு கொரானா என்ற கொடூர அரக்கன் மூலம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் அந்த அசுரன் கையில் சிக்காமல் பாதுகாப்புடன் இருப்பதே தப்பிப்பதற்கான வழிமுறை யாகும்.



# ராசி பலன்கள்

**1.06.2021 முதல்**
**15.06.2021 வரை**
ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை
CELL 9487215736



### மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் வெற்றியைதேடிதரும் மாதமாக இந்த மாதம் அமையும் பொருளாதாரம் மேம்படும். பணவரவு சீராக இருக்கும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். வெளிநாடு வேலை வாய்புகள்உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும் குடும்ப உறவுகளில் விரிசல்கள் ஏற்படும் தாயார் உடல்நிலை பாதிக்கப்படும். வெளியூர் பயணங்களை தவிர்த்து கொள்வது நல்லது வழக்குகளில் வெற்றிகள் உண்டாகும் நீண்ட நாட்களாக வரவேண்டிய பணம் வந்து சேரும். திருமண முயற்ச்சிகளில் முன்னேற்றம் காணப்படும். வாகனங்களில் செல்லும் போது அதிக கவனம் தேவை.

### ரிஷபம் ராசி அன்பர் களே உங்களுக்கு

குடும்ப உறவுகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும். பணவரவு சீராக இருக்கும் தொழில் முன்னேற்றம் அடையும் லாபங்கள் அதிகரிக்கும். மானவர்களுக்கு படிப்பில் நல்லமுன்னேற்றம்உண்டாகும் புதிய தொழிலுக்காக கடன் வாங்கும் நிலமை உண்டாகும் தந்தையின் உடல்நலனில் கவனம் தேவை செய்யும் வேலையில் மாற்றங்கள் உண்டாகும் உடல் நிலைசீராக இருக்கும் வீன் செலவுகளை குறைத்து கொள்வது நல்லது வீடு,வாகன சேர்க்கை உண்டாகும் சொத்து பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வெளியூர் பயணங்கள் மூலம் சிரமங்கள் ஏற்படும்.மனைவி மூலம் சொத்துக்கள் சேரும்.

### மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகளில் வெற்றிகள் உண்டாகும் வாகன சேர்க்கை உண்டாகும். ஆரோக்கிய விஷயங்களில் கவனம் தேவை. பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும் பணவரவு சீராக இருக்கும் தந்தையுடன் கருத்து வேறுபாடுகள் உண்டாகும் புதிய வீடு,மனை வாங்குவீர்கள் மானவர்கள் படிப்பில் நல்ல மதிப்பென்கள் பெறுவீர்கள் சுய தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும்.வெளியூர் பயணங்களை தவிர்ப்பது நல்லது. தொழிலில் லாபம் அதிகரிக்கும். மனைவியின் சொல்லுக்கு மதிப்பு கூடும்.

### கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்ப உறவுகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாகும்.வாகனங்களில் செல்லும்போது அதிக கவனம் தேவை மானவர்களுக்கு படிப்பில் மந்த நிலை உண்டாகும் சொத்துபிரச்னைகளில் இழுபறி நிலை உண்டாகும். மனைவி மற்றும் தந்தையின் உடல் நலனில் கவனம் தேவை. முதலீடுகளில் அதிக கவனம் தேவை. தெய்வ வழிபாடு அதிகரிக்கும். புதுபுது திட்டங்களால் தொழி லில் லாபங்கள் அதிகரிக்கும். லாட்டரி யோகம் உண்டு திடீர் அதிர்ஷ்டம் ஏற்படும்.பணவரவு நன்றாக இருக்கும்.


### சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு

கூட்டு தொழிலால் லாபங்கள் உண்டாகும்.சுப நிகழ்ச்சிகள்நடைபெறும். திருமண பேச்சுவார்தைகள் மகிழ்ச்சியை தரும். திடீர் அதிர்ஷ்டம் உண்டாகும்.தொழிலில் தந்தையின் ஆதரவு அதிகரிக்கும்.தொழிலில்எதிர்பார்த்தலாபம் உண்டாகும்.மாணவர்களுக்கு படிப்பில் இருந்த மந்த நிலை விலகும். குழந்தைகளால் மனக்கஷ்டங்கள் ஏற்படும். அரசாங்க விஷயங்களில் கவனம் தேவை.. மனைவியின் மூலம் ஆதாயம் அதிகரிக்கும்.புதிய முயர்ச்சிகளில் வெற்றி கிட்டும்.பணவரவு நன்றாக இருக்கும்.நட்பு வட்டாரம் அதிகரிக்கும்.

### கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்ப உறவுகளில் விரிசல்கள் உண்டாகும். வெளிநாடு முயற்சிகள் வெற்றியை தேடி தரும். தொழிலுக்காக கடன் வாங்குவீர்கள். குழந்தைகள் மூலம் செலவுகள் அதிகரிக்கும். மனைவி மூலம் சுப செலவுகள் உண்டாகும். தந்தை யுடனான வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. சக ஊழியர்களிடம் தன்மையாக நடந்து கொள்ளுங்கள். லாபங்கள் குறைந்த அளவில் இருக்கும். முன்னோர்கள்

வழிபாடு செய்வது நன்மை தரும் இந்த மாதம் விரயங்கள் அதிகம் உண்டாகும். மாண வர்களுக்கு படிப்பில்நல்ல முன்னேற்றம் உண்டாகும்.




### துலாம் ராசி அன்பர் களே உங்களுக்கு

குழந்தைகளால்மகிழ் ச்சிகள் உண்டா கும். திடீர் பணவரவு ஏற்படும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். மகிழ்ச்சிகள் அதிகரிக்கும். மனைவியிடம் கருத்து வேறு பாடுகளை குறைத்து கொள்வது நல்லது குடும் பத்தில்சில குழப்பங்கள் உண்டாகும். பேசும் போது அதிக கவனத்துடன் பேச வேண்டும். ஆன்மீக எண் ணங்கள் அதிகரிக்கும். தொழிலில் அதிககவனம் தேவை. போட்டிகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள். தொழிலில் தார்ச்சமயம் முதலீடுகள் செய்ய வேண்டாம்.

### விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

திருமணம் கைகூடும் உங்களுடைய முயற் சிகள் வெற்றியை தேடி தரும். வாகன சேர்க்கை ஏற்படும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தெய்வ அனுகூலம் உண்டாகும். தாயார் உடல் நலனில் அதிக கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் உண்டாகும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தெய்வ அனுகூலம் உண்டாகும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும்.செமிப்புகள் அதிகரிக்கும். முதலீடுகளில் அதிக கவனம் தேவை. உறவினர்கள் ஒன்று கூடி மகிழ்வீர்கள். சிவவழிபாடு நன்மையை தரும்.பணவரவு நன் றாக இருக்கும். கூட்டு தொழிலில் அதிக கவனம் தேவை.

### தனுசு ராசி அன்பர்களே உங்களுக்கு

பணவரவு சீராக இருக்கும். கூட்டு முயற்சிகள் வெற்றியை தரும். தந்தையின் சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். தொழிலில் புது முயற்சிகள் வெற்றியை தரும். லாபங்கள் அதிகரிக்கும். சேமிப்பு அதிகரிக்கும் போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மானவர்களுக்கு படிப்பில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். உடல் நலனில் அதிக கவனம் தேவை. மனைவி மூலம் ஆதாயம் உண்டாகும். வெளியூர் பயணங்கள் மேற்கொள் வீர்கள். உங்களுக்கு இந்த மாதம் மருத்துவ செலவுகள் அதிகரிக்கும்.நீண்ட நாட்களாக திரு மணம் ஆகா தவர்களுக்கு திருமணம் கைகூடும்.

### மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு

பணவரவு நன்றாக இருக்கும். உங்க ளுடைய முயற்சிகளில் தொய்வு ஏற்படும். செலவுகள் அதிகரிக்கும். உங்களுடைய குறிக் கோளில் முழு கவனத்துடன் செயல்படுங்கள் தடைகளை தகர்த்து வெற்றியை நிலைநாட்டு வீர்கள். பூர்வீக சொத்துக்களால் பிரச்சனைகள் உண்டாகும் குல தெய்வவழிபாடு நன்மையை தரும். வெளியூர் பயணங்களை குறைத்து கொள்வது நல்லது.திருமண பேச்சு வார்தைகள் மகிழ்சியை தரும்.தொழில்போட்டிகள் உண்டாகும். தொழிலில் நல்ல லாபம் உண்டாகும். பேச்சு சாதுர்யம் அதிகரிக்கும். குழந்தைகளால் மகிழ்ச்சிகள் உண்டாகும். திருமணம் கைகூடும்.

### கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு

மனைவி மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சிகள் உண்டாகும். சுப செலவுகள் உண்டாகும்.உறவி னர்களின் வருகை மகிழ்ச்சியை தரும். வாகன சேர்க்கை ஏற்படும். திருமண முயற்சிகளில் உள்ளவர்களுக்கு திருமணம் கைகூடும். வாக னங்களில் செல்லும் போது அதிக கவனம் தேவை. தொழிலில் நல்லலாபம் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் நல்ல முன்னேற்றம் பெருவார்கள். வருமானம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். தந்தை யின் உடல் நலனில் அக்கறை தேவை. காதல் கைகூடும்.

### மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் வெற்றியை தேடி தரும்.மானவர்களுக்கு படிப்பில் கவனக் குறைபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் சிறப் பாக இருக்கும். புதிய வாகனம் மற்றும் வீடு வாங்குவதில் முதலீடு செய்வீர்கள். பூர்வீக சொத்துக்களால் ஆதாயம் அடைவீர்கள். மனைவி மூலம் செலவீனங்கள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களை தவிர்ப்பது.நல்லது. சுய தொழில் மூலம் லாபங்கள் அதிகரிக்கும். வேலையாட்களிடையே கவனமாக இருக்கவும். உடல் நலனில் கவனம் தேவை.

# உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கினால்... பக்தி பொங்கும்

வானத்தையும், பூமியையும் இணைக்கினற் ஊசி நூல் இரண்டு. அது கடவுளும் நீயுமே ஆகும்.

❖❖❖

“ஏ! தென்னை மரமே” நீ சாக்கடையில் நின்று கொண்டு நீரை உறிஞ்சாதே என்று சொல்லுவதில் புனிதமில்லை. உயர்ந்த மரமான தென்னை எங்கு நின்று கொண்டு இருந்தாலும் இளநீரையேதரும்.

❖❖❖

புலிக்கு தொடர்ந்து பால் சாதம் போட்டு வளர்த்துக்கொண்டே இருப்பதில் லாபம் என்ன? லாபமே இல்லை. அதேபோல் ஒரு ஞானிக்கு.. ஒரு மனிதன் உலக உபதேசங்களைச் சொல்லிக் கொண்டே இருப்பதில் லாபமென்ன? நஷ்டம் மனிதனுக்கே.

❖❖❖


www.aanmeegamalar.com

புத்தியாய் இருந்து புத்தியையே அறுவடை செய். குறுக்கு வழியில் யோசனை செய்து மடமையை அறுவடை செய்யாதே. இதுவே உனக்கு எனது பொங்கல் வாழ்த்து.

❖❖❖

உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கினால்... உடனே பக்தி பொங்கும்!! இதுவே வழி.

❖❖❖

பூஜைகளைத் தொடர்ந்து செய். அதிலே மகிழ்ச்சியும், பக்தியும் சேர்ந்து பொங்கும். இதுவே எனது “பொங்கல் வாழ்த்து”.

❖❖❖

அறிவைக் கொண்டு சிந்தனை செய்யும் பொழுது கடவுளை எண்ணாதே. செய்தால் அறிவு விளங்காமல் உலகில் யார் யாருக்கெல்லாமோ கொம்பு முளைத்துவிடும்.

❖❖❖

புலிக்கு கொம்பு முளைக்கவே முளைக்காது. பூஜை செய்யும் பொழுது வேறு சிந்தனைகளை செய்யாதே. மனதினால் ஆண்டவனையே எண்ணு. புலிக்கு கொம்பு முளைத்து விடும்படியாகச் செய்யாதே.

❖❖❖

மயிலின் அழகு உனக்கு எதில் வேண்டும் என்று கேட்கிறார் புத்தர். அது எனக்கு “சிந்தனையில் வேண்டும்” என்று சொல்.

❖❖❖

யானையின் பலம் உனக்கு எதிலே வேண்டும் என்று கடவுள் கேட்கிறான். “பக்தியிலே” யானை பலம் வேண்டும் என்று கேள்.

❖❖❖

மனிதனே சிந்தனையல்ல. மனிதனே புத்தியுமல்ல. மனிதனே மூடனுமல்ல.

❖❖❖



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன்
நடராஜன்
செல்: 9444228203
♦♦♦
முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192
♦♦♦
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
♦♦♦
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.

## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

மனிதனே ஆணவமல்ல. ஆணவமே மனிதனல்ல. அப்படியானால் புத்தி என்ன என்று யோசி. உன்னை எனது பள்ளி எல்.கே.ஜியில் சேர்த்துக் கொள்கிறேன்.

❖❖❖

எல்.கே.ஜி..படிக்கின்ற குழந்தை, நான் ஒண்ணாங்கிளாஸ் என்று சொல்லுகிறான். அதுபோல பக்தன், கடவுளே எல்லாம் என்று மட்டும் சொல்லுவதில்லை. நானே கடவுள் என்றும் சொல்லுகிறான்.

❖❖❖

சமுதாய முன்னேற்றம் இயற்கையானது. செயற்கை முறையில் நாட்டை முன்னேற்றுவது மிகவும் கடினம். மாட்டுவண்டியில் மாட்டை பின்பக்கம் கட்டி வண்டியை முன்பக்கம் ஓட்டுவது முடியவே முடியாது.

❖❖❖

கடவுள் பக்தி வேண்டும் என்று நீயே விரும்பு. கடவுள் உன்னையே விரும்புவான்.

❖❖❖

விருப்பம் இல்லாத பொழுது பக்தி விருப்பம் உன்னிடம் வராது. குதிரையின் வாலில், யானை வெடி கட்டி வெடித்து அதை ஓட்டுவதில் என்ன லாபம்?

❖❖❖

சமுதாயத்திற்காக வாழுகின்றேன் என்கிற உணர்வு உனக்கு ஏற்பட்டால் நீயே மனிதன்; இவ்வுணர்வு ஏற்படாவிட்டால் நீயே மிருகம்.

❖❖❖

சிந்தனையில் தயிரைப் போன்று உறைந்து விடு!. பக்தி செய்ய நெய்யைப் போன்று உருகு!!

❖❖❖

நல்லவனாய் இருப்பது மிகச் சுலபம். கெட்டவனாய் இருப்பது மிகக் கடினம். இன்னும் மிகக் கடினமானதையே மனிதன் செய்து கொண்டிருக்கிறான்.

❖❖❖

எழுதும் மேஜையின் மீது ஏறி நிற்பதும் இல்லை. உட்காருவதும் இல்லை. அதுபோல் மனிதனுக்கு தேவையில்லா சிந்தனைகள் வேண்டவே வேண்டாம்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன்




www.aanmeegamalar.com

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மதுரை ராமேஸ்வரம் தேசிய நெடுஞ் சாலையோரத்தில் உள்ள கால்பிரிவு கிராமத்தில் தண்ணீரை பாலாக மாற்றிய செல்வ முருகன் திருக்கோவில் உள்ளது. கால்பிரிவு கிராமத்தை சேர்ந்த ஸ்ரீ ஆறுமுக சுவாமி என்ற தீவிர முருக பக்தர் முருகனுக்கு சிறு கோவில் அமைத்து பூஜைகள் செய்து வந்தார்.

எப்போதும் முருகன் மீது தீராத அன்பு கொண்ட அவர் தினமும் பாலபிஷேகம் செய்யும் பூஜை செய்து வந்தார்.

100 ஆண்டுகளுக்கு முன் பங்குனி உத்திரதினம் செல்வமுருகனுக்கு அபிஷேகத்திற்கு வழங்கும் பாலை கன்று குட்டி குடித்து விட்டதாகவும், அபி ஷேகத்திற்கு பால் இல்லை என்று பால் வழங்கும் விவசாயி தெரிவித்துவிட்டார்.

செல்வ முருகன் அபிஷேகத்துற்கு பால் இல்லை என முருக பக்தர் ஆறுமுக சுவாமி மனம் வருந்திய போது 'தீடீர்' என்று வைகை ஆற்றில் ஊற்று தோன்றி குடம் செம்புகளில் தண்ணீர் நிரப்பி அபிஷேகம் செய் என தென் பகுதியில் இருந்து கணீர் குரல் ஒலித்து மறைந்தது.

திருச்செந்துார் முருகனே கூரியது போல் உடனே ஆறுமுக சுவாமி மற்றும் கிராம மக்கள் வைகை ஆறு சென்று குடம், செம்பு பாத்திரங்களில் ஆற்று நீரை நிரப்பி செல்வமுருகன் கோவிலை நோக்கி ஊர்வலமாக வந்து கோவிலை வந்து அடைந்த போது தண்ணீர் நிரம்பிய குடம் செம்பு பாத்திரங்களில் பால் பொங்கி வழிந்தது.

அதை தொடர்ந்து செல்வமுருகனுக்கு குடம் குடமாக தண்ணீரை அபிஷேகம் செய்தபோது அனைத்தும் பாலாக மாறியது பால் அபிஷேகமும் தங்கு தடையின்றி நடந்தது.

நாகலிங்க பூமரம், தென்னை மரங்கள் அழகிய வயல்வெளி பகுதியில் அமைந்து உள்ளது. செல்வமுருகன் கோவில் இக்கோவில் வாசலில்









மகா கணபதியும், செல்வமுருகன் வள்ளி தெய் வானையுடன் காட்சி தருகிறார். காவல் தெய்வமாக இடும்பன் சுவாமியும் உள்ளது. கோவில் முன்பு அரசமரம், வேம்புமரம் இணைந்த மரத்தடில் இருநாகர் தெய்வங்கள் விநாயகர் சன்னதியும் உள்ளது. சிறிய கோவிலாக இருந்த செல்வமுருகன் கோவில் 2003ம் ஆண்டு பெரிய கோவிலாக கட்டி கும்பாபிஷேகம் நடந்தது. வேண்டுவோருக்கு வேண்டும் வரங்களை தரும் செல்வ முருகனாக இங்கு காட்சி அளிக்கிறார்.



அழகுராஜா

ஆண்டுதோறும் பங்குனி உத்திர திருவிழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதில் ஏராளமான பக்தர்கள் வைகை ஆற்றில் இருந்து தீர்த்த காவடி, பால்காவடி, அலகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்துகின்றனர். அன்று முருகனுக்கு நடைபெறும் பால் அபிஷேகத்தை காண ஏராளமானோர் கோவிலுக்கு வருவார்கள்.

இதுபற்றி கோவில் ஸ்தாபகர் ஏ.ஆர்.பி. முருகேசன் கூறுகையில், தண்ணீரை பாலாக மாற்றியதால் பச்சை தண்ணீரை பாலாக மாற்றிய செல்வமுருகன் எனவும் அழைக்கப்படுகிறது.

கடும் வறுமையில் வாடுபவர் செல்வமுருகனை மனமுருகி வணங்கி இன்றும் செல்வநிலை அடைந்து உள்ளனர். வேண்டுதல் நிறைவேறிய வர்கள் ஆண்டு தோறும் பங்குனி உத்திர திருவிழா அன்று குடம் குடமாக பால் அபிஷேகம் செய்கின்றனர்.

ஒன்பது சஷ்டி தினம் அன்று விரதம் இருந்து செல்வமுருகனை வணங் கினால் குழந்தை இல்லாதவர்களுக்கும் குழந்தை பாக்கியம் கிடைப்பதாகவும் நம்பப்படுகிறது.

பங்குனி உத்திரம் பெரிய திரு விழாவாக நடத்தப்படுகிறது. வயலூர் முருகன் கோவில் நினைவுபடுத்துவது போல் இயற்கை அமைப் போடு செல்வ முருகன் கோவில் அமைந்து உள்ளது என அவர் தெரிவித்தார்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# ஈசனிடம் ஒடுங்கிய சப்தரிஷிகள்





www.aanmeegamalar.com

இறைவன் தனது திருவுள்ளப்படி இப்பூவுலகில் பற்பல இடங்களில் பல்வேறு அதிசயமான ஆச்சரியமான நிகழ்வுகளை அவ்வப்போது நிகழ்த்திக் கொண்டே இருக்கின்றார். அவ்வாறான மகிமை மிகுந்த தலங்களில் வழிபாடு செய்வது பக்தர்களாகிய நமக்கு தீவினைகளைக் களைந்து நல்வினைகளைப் புரியும் என்பது உறுதி.

அவ்வாறு இறைவனது மேன்மை மிகுந்த திருத் தலங்களுல் ஒன்றாகத் திகழ்கிறது ஒடுக்கத்தூர். ஆதியில் சப்தரிஷிகளான காஷ்யபர், வசிஷ்டர், அத்ரி, பரத்வாஜர், கௌதமர், ப்ருகு, ஆங்கீரசர் ஆகிய ஏழு தவ முனிவர்களும், பல்வேறு இடங் களில் தவம்புரிந்து ஈசனை பூஜித்து வழி பட்டுள்ளனர்.

ஒரு சமயம் இவர்கள் ஏழ்வரும் ஆகாயமார்க்கமாக வரும் வேளை யில், பசுமையான மூலிகைக்காடுகள் நிறைந்த, ஜவ்வாதும் சந்தனமும் மணக்கும் ஜவ்வாது மலை அடி வாரத்தில் வடக்கு முகமாகபாயும் நதியான உத்தர காவிரி ஆற்றங்கரை யைக் கண்டு கீழிறங்கி, நதிக் கரையில் சிவலிங்கம் ஸ்தாபித்து அனுதினமும் நதி நீராடி, அற்புத மாக சிவபூஜை புரிந்து வந்தனர். மனம் மகிழ்ந்த இறைவன்... சப்தரிஷிகள் முன் தோன்றி அவர்களை தன்னுள் ஒடுக்கி தேஜோ மயமாக ஜொலித்தார்.



மோ.கணேஷ்

சப்தரிஷிகளும் இங்கே ஈசனிடத்தில் ஒடுங்கிய தால் இத்தலம் ஒடுக்கத்துச் செறிவாய்

(செறி = திரளுதல்) என்றானது. இத்தலத்து ஈசன் மற்ற தலங்களில் பூஜைப் ஸ்ரீ சப்த ரிஷீ ஸ்வரர் என்று போற்றலானார்.

புரிந்து கிளம்பிய சப்தரிஷிகள், இங்கு சர்வேஸ்வரனுடன் ஒன்றாகக் கலந்ததனால் சப்தரிஷிகளின் அருள்இங்கே ஒரு சேர பரவி யுள்ளதைப் பலர் தங்களது வாழ்வில் உணர்ந்துள்ளனர்.

பலர் தங்களின் தடைபட்ட காரி யங்கள் இங்கே ஈசனை வழிபட்டு நிறைவேறப் பெற்றுள்ளனர். "ஒடுக்கத் துப் செறிவாய்" எனக் குறிப்பிட்டு திருப்புகழ் பா ஒன்றை இத்தல கந்தன் மீதி பாடி அருளியுள்ளார் அருணகிரிநாதர்.

'ஒடுக்கத்தூர் சுவாமிகள் என்கிற மஹான் இங்கு பல காலம் வாழ்ந்து பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளார்.





www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

நெடுஞ்சாலையை ஒட்டியே ஆலயம் தல தீர்த்த மான உத்திர காவேரி நதியின் தென்கரை மீது அமைந்துள்ளது. தென் முகவாயில் தோரண வாயிலாக அமையப்பெற்றுள்ளது. இராஜகோபுரம் காணப்படவில்லை.

உள்ளே ஒரே பிராகார அமைப்பு காணப் படுகிறது. கிழக்கு நோக்கிய சுவாமி சந்நிதியும், தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதயும் ஒரே மூடு தளத்துடனான மகாமண்டபத்தில் இணைந் துள்ளது. வெளியே பலிபீடம், கொடிமரம் மற்றும் நந்தி மண்டபம் உள்ளது.

தென்முக உள் வாயிலுள் நுழைந்து நேராக அம்பிகையை வணங்குகின்றோம். அம்பாள் சிறிய ரூபியாக ஸ்ரீ அபீதகுஜாம்பாள் என்ற திரு நாமத்துடன் வீற்றிருந்து அபயமளிக்கின்றாள்.

பின், மகாமண்டபத்தில் இடப்புறம் திரும்பிட. கருவறையுள் பக்தர்களை தன்பால் ஈர்த்து, திருவருள் பொழிகின்றார் சுவாமி ஸ்ரீ சப்தரிஷீஸ்வரர். அற்புதமான சிறிய லிங்க மூர்த்தமாகத் திகழும் இப்பெருமான் வரங்களை வாரி வழங்கும் வரப்பிரசாதி வீற்றருள்கின்றார். ஐயனை வணங்கி, ஆலய வலம் வருகையில் தென்புறத்தில் சப்தமாதர்கள் வரிசையாக ஒரே கல்லில் வடிக்கப்பட்டுள்ளதைக் கண்டு பரவசம்





அடைகிறோம்.பின்னர், பூர்ண புஷ்கலாசமே தராக அருள்பாலிக் கின்றார் ஸ்ரீ ஆதி சாஸ்தாவான அய்யனா ரப்பர்.

ஏனைய கோஷ்ட தெய்வங்கள் உரிய மாடங் களில் அலங்கரிக்கின்றன. கன்னி மூலை என்னும் நிருர்தியில் கணபதி தனி சன்னதி கொண்டுள்ளார். கந்தன், வள்ளி தெய்வானையுடன் மேற்கில் ஆலயம் கொண்டுள்ளார்.

அழகிய சிறிய ஆலயம். ஆத்ம சுகம் தருகின்றது. அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இவ்வாலயத்தில் அனைத்து சிவாலய விசேடங்களும் சிறப்புற நடத்தப்படுகின்றன. தினமும் ஒரு கால பூஜை நடந்திடும் இவ்வாலயம்.. காலை 6 மணி முதல் 10 மணி வரையும்,

மாலை 5 மணி முதல் 8 மணி வரையும் திறந்திருக்கும். கல்வி வளம், கல்யாண வரம் என அனேக பேறுகளையும் அளிக்கவல்லது இத்தலம். வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டத்தில் உள்ள இந்த ஊர் வேலூரில் இருந்து 43 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வேலூர் பழைய பேருந்து நிலையத்தில் இருந்து ஊசூர், அணைக்கட்டு வழியாக ஒடுக்கத்தூர் செல்ல நிறைய பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

ஆன்மீகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்

# கோயிலுக்குச் சென்றால்
# தொடர்ந்து நாட்கள்

- 3 நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் பிரம்மா விஷ்ணு சிவன் முதலான மூன்று தெய்வங்களின் அருள் கிட்டும்
- 5 நாட்கள் சென்றால் அனைத்து வியாதிகளும் நீங்கும்
- 7 நாட்கள் தொடர்ந்து சென்றால் திருமணம் ஆகதவர்களுக்கு வரன் கை கூடும்
- 11 நாட்கள் சென்றால் உடலும் மனமும் தூய்மை பெறும்
- 13 நாட்கள் தொடர்ந்து சென்றால் நினைத்த காரியம் கைகூடும்
- 21 நாட்கள் தொடர்ந்து சென்றால் புத்திர பேறு நிச்சயமாக கிட்டும்
- 33 நாட்கள் தொடர்ந்து சென்றால் சிவாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்த பலன் கிட்டும்
- 77 நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் ஒரு சத்ர யாகம் செய்த பலன் கிட்டும்
- 108 நாட்கள் தொடர்ந்து கோயிலுக்கு சென்றால் ஒரு தேவேந்திர பூஜை செய்த பலன் கிட்டும்
- 1008 நாட்கள் தினமும் கோயிலுக்கு சென்றால் அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்
- வாழ் நாள் முழுவதும் தினமும் கோயிலுக்கு செல்பவனுக்கு கிடைக்காத வஸ்து என்று இவ்வுலகில் எதுவும் இல்லை!!
- அனைத்து விதமான சுக போகங்கள் அனுபவித்து முக்தி பேரனாந்ததை அடைவது உறுதி!!

www.aanmeegamalar.com

## அவசியம் கோவிலுக்கு செல்லுங்கள்



www.aanmeegamalar.com

ஓம் ஈஸ்வராய நமஹ:

# ஞானாலயம்

ஒளியை நோக்கிய உன்னதப் பயணம்



## ஸ்ரீ ரேணுகா தேவியின் மந்திர உபதேச தீட்சை மற்றும் ஸ்ரீ அகத்தியர் மகரிஷி வழங்கும் ஆத்மவிடுதலை



குருதட்சணை:
உங்கள் விருப்பத்திற்கு
ஏற்ப செலுத்தலாம்

தீட்சையானது நிகர்நிலையில்
(Zoom & Whatsapp)
தரப்படுகிறது.

**நிகர்நிலையில் தீட்சை**

நிகர்நிலையில் தீட்சை பெற, எங்கள் இணையதளத்தில் பதிவு செய்யவும். ஜூம் மற்றும் வாட்ஸாப் மூலம் தீட்சை வழங்கப்படும்.

நிகர்நிலை தீட்சைக்கு இணைய தளத்தில் முன் பதிவு அவசியம்.



### மந்திரத்தை 21 நாட்கள் ஜபிப்பதால் ஏற்படும் பலன்கள்?

- சிரசினில் உள்ள அமிலக் கழிவுகள் அகன்றுவிடும்
- ஒற்றை அணு (Pineal gland) அதிக அளவில் ஆன்ம ஆற்றல்களை ஈர்க்கும்
- உயிர் ஆற்றல் பெருகும்
- நரம்பிழைகளில் உள்ள உப்பு படிமன்கள் கரைந்திடும்
- மூளைப் பகுதியானது அதிக வெப்ப ஆற்றலினை ஏற்று துரிதமாய் இயங்கும்
- உடல் பிணிகள் நீங்கும்
- மாயை, கர்மம் மற்றும் ஆணவத் திரைகள் விலகும்

### Benefits of Pineal Gland activation achieved when the mantra is chanted for 21 days:

- Sound vibrations will dissolve/remove the acidic toxic waste & salt deposits inside your nerve fibers
- Your pineal gland will be replenished with abundant energy resulting in an increase of your life force energy
- Regular chanting will remove all kind of diseases and ailments of the body
- Knowledge and wisdom will increase manifold
- The veils of maya, karma and pride blocking the dharshan of the soul within us will be removed, making us eligible for soul liberation.

இணைய தளத்தில் முன்பதிவு அவசியம் www.enlightenedbeings.org

எண் 27, ஜீவா வீதி, முத்திரையர் பாளையம், புதுச்சேரி – 605 009.
Phone: (+91) 89405 96665. | email: wisdomtemple.pondy@gmail.com

# மனநோய், தீயசக்திகளின் பாதிப்பிலிருந்து காக்கும் அருள்மிகு மந்திரகிரி வேலாயுதசாமி திருக்கோவில்

ஒரு சமயம் கயிலையில் வீற்றிருக்கும் நந்திதேவரிடம், மந்திரகிரியின் சிறப்புக்களை எடுத்துரைக்குமாறு மார்கண்டேயன் வினவ, அவர் கூறலானார். சூரபத்மன் என்ற அரக்கன் கடுமையான தவமிருந்து ஈசனிடமிருந்துபெற்ற வரத்தினால், தேவர்களுக்கும், மக்களுக்கும் துன்பம் கொடுத்து வந்தான்.



ராஜாமணி

இதையறிந்த ஈசன் சூரனை அடக்கும் பொருட்டு கார்த்திகேயனைப் படைத்தார். ஈசனின் நெற்றிக்கண்ணிலிருந்துதோன்றி சரவணப்பொய்கையில் கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தகார்த்திகேயனை பின்னர் கயிலைக்கு அழைத்து வந்தார். தன் அவதார நோக்கத்தை தந்தையிடம் கேட்டுக் கொண்ட முருகன், இத்தலத்திற்கு புறப்படத் தயாரானார்.

அடிவாரத்தில் வாமதேவர் தவக்குடில் உள்ளது. இங்கு வியாசர், அத்திரி, கலைக்கோட்டு முனிவர், குச்சிகன், கேரிகோசிகன், அகத்தியர் போன்றோர் தவம் புரிந்திருக்கிறார்கள். ஒருமுறை நாரதர், இக்குடிலுக்கு விஜயம் செய்தபோது யார் தவத்தில் சிறந்தவரோ அவருக்கு என் வணக்கம் என்றார். தவத்தில் சிறந்தவர் அகத்தியர். எனவே, நாரதரின் வணக்கம் அவருக்கே உரியது என அனைவரும் நம்பினர். ஆனால் வியாசமுனிவரோ இக்கூற்றை ஏற்க மறுத்து அகத்தியரைவிட யாமே தவத்தில் சிறந்தவன் என இருமாப்புக் கொண்டார்.

அப்போது ஈசன் அங்கு தோன்றி அகத்தியரே தவசீலர் என உரைத்தார். அகத்தியர்வடக்கு நோக்கி அமர்ந்து மீண்டும் தவத்தில் ஈடுபட்டார். தவத்தை மெச்சிய ஈசன், அகத்தியரின் விருப்பப்படி, சயிலோக தீர்த்தம் எனும் சுனையை ஏற்படுத்தி, இங்கு நீராடுபவர்களின் பாவம் அறவே நீங்கி அருள் பெறுவர் என ஆசி கூறினார். என்றும் வற்றாத இச்சுனை ஞானத்தீர்த்தம் என்ற பெயரில் தற்போது அழைக்கப்படுகிறது. கோவிலின் வடக்குப் பகுதியில் உள்ள இத்தீர்த்தத்தில் நீராடி முருகனை வழிபட்டால் மனநோய், தீயசக்திகளின் பாதிப்பிலிருந்து விடுபடலாம் என்கிறார்கள்.

சென்சேரிமலை திருப்பூர் வட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது.

– ராஜாமணி, சென்னை

தொடர்பு எண்: 94879 34050



# திக்குவாய், ஆஸ்துமா பிரச்சனை தீர்க்கும் மானாம்பதி திருக்கரைஈஸ்வரர்

பழங்கால பெரிய சிவன்கோயில் (திருக்கழுக் குன்றம்) சுற்றி எட்டு சிறிய சிவன் கோயில்கள் அமைந்திருக்கும். அவற்றை பதிவிடுங்கள் என சென்னை நண்பர் ஒருவர் வேண்டுகோள் விடுத்தார். அதன்படி பதிவிட்ட முதல் சிவன் கோயில் இது...

செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கல்பட்டி லிருந்து திருக்கழுக்குன்றம் வழியாக திருப் போரூர் செல்லும் சாலையில் மானாம்பதி என் கின்ற ஊர் அமைந்துள்ளது.

சிவபெருமான் அம்பாளுடன் வந்து வேடனாக மான்மீது அம்பு எய்திய காரணத்தினால் மான் அம்பு எய்தியபதி என்கின்ற பெயர் மருவி மானாம்பதி என அழைக்கலாயிற்று என்று செவி வழி செய்தி உள்ளது.

**கல்வெட்டில் உள்ள தகவல்கள்:**

முதலாம் பராந்தக சோழன் ஆட்சியில் எடுக்கப் பட்டுள்ள இந்த கோயிலுக்கு இராட்டிடக்கூடன் மூன்றாம் கிருஷ்ணன் கி.பி.967 ரூல் விளக் கெரிக்க ஏற்பாடு செய்துள்ளான். முதலாம் இராஜராஜன் இக்கோயில் திருப்பணி செய்து பராமரித்துள்ளான்.கி.பி. 990 ல் கனகாட்டூர் திருக்காபுர தேவர்க்கு வழிபாடு.விளக்கெரிக்க நிலமளிக்கப்பட்ட செய்தியும் கி.பி.993ல் கனகாட்டூர் ஊரார் நிலம் விற்பனை செய்த விவரமும் குறிப்பிடபட்டுள்ளன.

அத்துடன் திருவகத்தீஸ்வரர் சாத்தன் கோயில்குறிப்பும் திருக்காபுர தேவன் என்ற வரி கல்வெட்டும் இத்துடன் உள்ளது.திருக்கழுக் குன்றம் பேரூராகவும் இந்த ஊர் சிற்றுராகவும் இருந்திருக்கலாம். கி.பி.993 ஆம் ஆண்டை சேர்ந்த கல்வெட்டில் பிடாரி மற்றும் சாஸ்தா கோயில்கள் குறிப்பிடபட்டுள்ளன கி.பி.999ல் அகத்தீஸ்வரர் கோயில் குறிப்பும் உள்ளது.












கஜபிருஷ்ட அமைப்பில் கருவறை

கி.பி.1125 ல் விக்கிரமன் இக்கோயிலுக்கு நிலம் விற்பனை செய்துள்ளதை தெரிவித்துள்ளான். கோப்பிருஞ்சிங்கன் ஆட்சியில் திருக்கரபுர கணக்கன் நந்தா விளக்கெரிக்க கி.பி.1257ல் ஏற்பாடு செய்துள்ளான்.கி.பி.1345 ஆம்ஆண்டில் இராஜநாராயண சம்புராயன் இக்கோயிலை பழுது பார்த்து வழிபாடுகள் தொடர வானமாதேவி கிராமத்தையும் திருக்கழுக்குன்றத்து பகுதி நிலங்களையும் இறைநீக்கி தேவதானமாக்கி யுள்ளான்.

வழிபாடு தொடர்பாக கைக்கோளர்களுக்கும் வணிகர்களுக்கும் தகராறு செய்து கொண்டதால் முதலாம் வேங்கடனின் முகவர் செஞ்சம நாயக்கன் நேரில் விசாரித்து உடையவர்.பெருமாள். பிள்ளையார் கோயில் நிர்வாகத்தில் வணிகர்கள் தலையிடாமல் இருக்க ஆணை பிறப்பித்துள்ளான். கி.பி 1610 ஆம் ஆண்டு இந்த ஊரில் நடைபெறும் புதன்கிழமை வார சந்தையில் வசூலிக்கப்படும் அல்லாயம் வரியை செல்வவினாயகர் கோயில் வழிபாட்டுக்காக வையப்ப நாயக்கருக்கு வழங்கப்பட்டுள்ளது கல்வெட்டுமூலம் தெரியவருகின்றது.

பசவதேவ மகாராஜவும் திம்மு நாயக்கனும் வீட்டு மனைகளை வழிபாட்டுக்கு வழங்கியுள்ளனர். வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள 16 கல்வெட்டுக்கள் இக்கோயிலில் அடையாளமிடப்பட்டுள்ளன.

பல்லவர் காலத்தை சேர்த்த சூரியன் சிற்பமும் சூலதாரி என்கின்ற சூலத்தேவர் சிற்பமும். துர்கை சிற்பமும் உள்ளது. கோயிலில் உள்ள சம்புவராயர் கல்வெட்டு திருக்கழுக்குன்றப்பற்று வானவன்மாதேவி என இந்த ஊரினை குறிப்பிடு வதால். முதலாம் இராஜேந்திரன் ஆட்சியில் இவ்வூரின் அடுத்துள்ள அகரம் என்கின்ற கிராமத்தில் 4000 பிராமணர்களை குடியமர்த்தி வானவன்மாதேவி சதுர்மங்கலம் என பெயரிடப்பட்டுள்ளது. அகரத்தின்ஒருபகுதியாக களக்காட்டூர் இருந்துள்ளது. பிராமணர்கள் வசித்த பகுதி அகரம் எனவும் பிறபகுதிகள் சதுர்வேத மங்கலம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.

(தகவல்: காஞ்சிபுரம் மாவட்ட வரலாறு என்கின்ற நூலிலிருந்து...)

### ஆலயம் பற்றிய தகவல்கள்:

செங்கல்பட்டிலிருந்து 25 கிலோமீட்டர் தொலைவிலும் திருக்கழுக்கன்றத்திலிருந்து 10 கிலோமீட்டர் தொலைவிலும் இந்த கோயில் அமைந்துள்ளது. கோயிலில் நுழையும் முன்னனே தற்போதைய தற்கொலைப்படை போலவே அந்த காலத்தில் இருந்துள்ளது.

கோயிலுக்கோ நாட்டுக்கோ சேதம் வரும்சமயம் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது தற்கொலை செய்து கொள்ளும் தற்கொலை படை வீரர்கள் சிலைகள் அமைந்துள்ளது. ஊர் மக்கள் இதனை வழிபட்டுவருகின்றனர்.

கோயிலில் நுழைந்ததும் கொடிமரம் வரவேற்கின்றது. கோயிலின் இடதுபுறம் வினாயகர் சன்னதி உள்ளது. வினாகயர் அம்மாளுடன் ஞானசக்தி வினாயகராக காட்சியளிக்கின்றார்.

கோயிலின் கருவறையில் சிவபெருமான் திருக்கரைஈஸ்வரராக நமக்கு காட்சியளிக்கின்றார்.

கருவறையை சுற்றி வருகையில் முதலில் சூரியன் சிலை உள்ளது. இது பல்லவர்காலத்தை சேர்ந்தது. இதுபோல சூலதாரி என்கின்ற சூலத்தேவர் சிற்பமும் துர்கைஅம்மன் சிற்பமும் பல்லவர்காலத்தினை சார்ந்தது.

### சூரியன் சிற்பம்:

சூலத்தாரி என்கின்ற சூலத்தேவர் சிலை, தூர்கையம்மன் சிலை, நால்வர் சிலை, உள்ளது.

இங்கு யோகபைரவர் மற்றும் கால பைரவர்




என அருகருகே இரண்டு பைரவர் கள் அமைந்துள்ளது இந்த தலத்தின் சிறப்பாக உள்ளது.



வேலன்

இந்த கோயிலின் கருவரை கஜ பிருஷ்ட அமைப் பில் அமைந்துள் ளது. கஜபிருஷ்ட அமைப்பின்மூலம் பிரபஞ்ச சக்தியை தக்க வைக்க முடியும்என முன்னோர்கள் கணித்து வைத்துள்ளார்கள்.

சோழர்கால கோயில்களில்இந்த கஜபிருஷ்ட அமைப்பினைகாண லாம். திருக்கழுக்குன்றம் பக்தவச்ச லேஸ்வரர் கோயிலும் இவ்வாறான அமைப்பினை கொண்டது.

கோயிலின் பின்புறம் குளம் ஒன்று அமைந் துள்ளது. கருவரையின் நிழல் இந்த குளத்தில் தெரிவது தளத்தின் மற்றுமொரு விஷேஷமாக கருதப்படுகின்றது.இந்த குளத்தில் 48 நாட்கள் குளித்து வந்தால் நாள்பட்ட சரும நோய்கள் குணமாவதாக குறிப்பிடுகின்றார்கள்.

கோயிலின் பின்புறம் கன்னிமார்கள் சிலை அமைந்துள்ளது. காசி விஸ்வநாதர் சன்னதியும் அமைந்துள்ளது.

இங்கு அம்மன் சன்னதி தனியாக உள்ளது. பாடலாம்பிகை என்கின்ற பெயருடன் அம்மன் அருள்பாளிக்கின்றார்.

**கோயிலின் சிறப்புகள்:**

குரல்வளம் சம்பந்தபட்ட திக்குவாய் உள்ள வர்கள். தைராய்டால் பாதிக்கப்பட்டவர்கள். இக் கோயிலில் அபிஷேகம் செய்து தரப்படுகின்ற தேன் உள்ளுக்கு அருந்தியும் விபூதியை பூசி வந்தால் நாளடைவில் சரியாகின்றது. அதுபோல ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் இங்கு தரப்படும் திருநீறை பூசிகொண்டு சிறிது அளவு எடுத்து நீரில் கரைத்து அருந்தி வந்தால் ஆஸ்துமா நோய் குணமாகின்றது.

ஐப்பசி மாதம் நடைபெறுகின்ற சூரசம்ஹாரம் முடிந்து முருகனுக்கு அணிவிக்கப்படும்திருக் கல்யாண மாலையை கல்யாணமாகமல்இருப்ப வர்களுக்கு அணிவித்தால்அவர் களுக்கும் விரைவில் திருமணமாகி விடுகின்றது.

இரண்டு பைரவர்கள் அருகருகே அமைந்துள்ளது. பல்லவர் கால சூரியன். சூலத்தேவர் சிலை மற்றும் துர்கை அம்மன் சிலைகள் அமைந்துள்ளது. கிரகணத்தின்போது ஏற்படும் தோஷம் இந்த ஆலயத்திற்கு வந்தால் நிவர்த்தியாகும்.

கருவரையின் நிழல் குளத்தில் விழுவது ஆலயத்தின் சிறப்பாகும்.

திரு.எம்.எம்.குமாரசாமி முதலியார்

அறங்காவலாராக சிறப்பாக பணியாற்றிய வர் திரு.குமாரசாமி முதலியார். திருக்கழுக்குன்றத் தில் அவர் அறங்காவலாக இருந்தசமயத்தில் செய்த பணிகள் ஏராளம். திருக்கழுக்குன்றம் பற்றிய நூல்களை எழுதியுள்ளார். அவர்கள் வம்ச வழிவந்தவர்கள் புகைப்படங்கள்கோயிலில் வைத்துள்ளார்கள்அவர் வழி வந்தவாரிசுகள் தற்போது இந்த மானாம்பதி தீர்த்தகரைஈஸ்வரர் கோயிலினை சிறப்பாக பராமரித்து வருகின்றார்கள். கோயில் பூஜை சம்பந்தமாகதொடர்பு கொள்ள திருமணி, போன்: 9791017692.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.


# ஆளுமை குறைகளைக் களைதல் அஹம்பாவத்தை களைதல்

1.ஸாதனை வ்யஷ்டியாக இருந்தாலும்ஸமஷ்டி யாக இருந்தாலும் அதற்கு அஷ்டாங்கஸாதனையி லுள்ள அங்கங்கள் மகத்துவம் நிறைந்ததாக உள்ளன.

2. வ்யஷ்டி அல்லது ஸமஷ்டி ஸாதனையில் ஈடுபடும்போது ஆளுமை குறைகளைக்களைவதற் கான முயற்சி அசாதாரண மகத்துவம் நிறைந்தது என்பதை உணர முடிகிறது. ஸனாதனின் பெரும் பான்மையான ஸாதகர்கள் ஸமஷ்டி ஸாதனை செய்து வருகின்றனர். அதிலும் பல ஸாதகர்கள் ஸமஷ்டி ஸாதனையின் ஒரு அங்கமான 'சேவை' என்ற விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் தரு கின்றனர். ஆளுமை குறைகளைக் களையும் செயல்முறைக்கு சிறிதளவே முக்கியத்துவம் தருகின்றனர். ஆளுமை குறைகளைக்களையும் செயல்முறையை நடைமுறைப்படுத்தும்போது ஸாதகர்களின் மனங்களில் அதிக போராட்டம் நடக்கிறது.

அதனால் ஸாதகர்களுக்கு இவ்வழிமுறையை கடைபிடிப்பது கடினமாக உள்ளது. மருந்து கசப்பாக இருந்தாலும் ஆரோக்கியம் மேம்பட அதை உட்கொள்ள வேண்டி உள்ளது.அதேபோல் ஆளுமை குறைகளைக் களையும் செயல்முறையை பிடிக்கிறதோ இல்லையோ ஸாதகர்கள் அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. முன்பு, குருக்ருபாயோகப்படி ஸாதனையின் அங்கமாக உள்ள ஸத்சங்கம், ஸத்சேவை, ஆன்மீக உணர்வு மற்றும் தியாகம் ஆகியவற்றிற்கு அதிக மகத்துவம் அளிக்கப்பட்டது. இன்று இவற்றின் மகத்துவம் குறைந்து ஆளுமை குறை களைக் களைதல் மற்றும் அஹம்பாவத்தை நீக்குதல் ஆகியவற்றிற்கு அதிக மகத்துவம் அளிக் கப்பட்டுள்ளது. காலத்திற்கேற்றபடி ஸாதனையின் அங்கங்களின் பிரமாணம் எவ்வாறு மாறுகிறது என்பதற்கு இதுவே ஒரு உதாரணம்.






மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

ஆளுமை குறைகள் மற்றும் அஹம்பாவத்தால் ஸாதகர்களின் மனங்கள் மாசடைந்து போகின் றன. அதனால் ஸாதகர்கள் எவ்வளவு சேவை, தியாகம் ஆகியவற்றை செய்தாலும் ஸாதனை யின் மூலம் எந்த அளவிற்கு சைதன்யம்கிடைக்க வேண்டுமோ அந்த அளவிற்கு கிடைப்பதில்லை. இதன் பலனாக இத்தகைய ஸாதகர்களின் முன்னேற்றம் போதிய அளவு நடைபெறுவதில்லை. சில ஸாதகர்களின் ஆளுமை குறைகளால் ஸமஷ்டிக்கு பெரும் தீமை ஏற்படுவதால் அவர் களின் ஸாதனை அதோகதியை அடைகிறது. தற்பொழுது தீய சக்திகளின் தாக்குதலும் அதிகரித்து உள்ளன.

ஸாதகர்களின் மாசடைந்த மனங்களைஉபயோ கித்து தீய சக்திகள் ஸாதகர்களுக்கு கஷ்டம் தருவது சுலபமாக உள்ளது. இத்தகைய கார ணங்களால் காலத்திற்கேற்றபடி 'ஆளுமை குறை களைக்களைதல்' மற்றும் 'அஹம்பாவத்தை களைதல்' ஆகியவை அதிக மகத்துவம் பெறு கிறது.

4. ஸனாதனின் எவ்வளவோ ஸாதகர்களுக்கு 'ஆச்ரமத்தில் இருந்து கொண்டு ஸாதனை செய்ய முடியவில்லை' என்றும் 'ஏதோ தடங்கல் களால் ஸமஷ்டி ஸாதனையில் பங்கெடுக்க முடிவதில்லை' என்றும் வருத்தம் ஏற்படுகிறது; அத்தகைய ஸாதகர்கள் வருந்தத் தேவையில்லை. ஏனென்றால் ஸத்சங்கம் மற்றும் ஸத்சேவை ஆகிய இரு அங்கங்களும் சேர்ந்து ஸாதனையில் 16% முக்கியத்துவமே பெறுகின்றன. அதனால் அவர்கள், 'வீட்டிலிருந்து கொண்டே ஸாதனை செய்து நல்ல முன்னேற்றம் அடைய முடியும்' என்பதில் நம்பிக்கை வைக்க வேண்டும். ஸனா தனின் எவ்வளவோ ஸாதகர்கள் வீட்டில் இருந்து கொண்டே ஸாதனை செய்து 60% க்கும் மேற்பட்ட ஆன்மீக நிலை அடைந்துள்ளனர்.

5. பொறுப்பு ஏற்றுள்ள ஸாதகர்கள் 'எல்லா ஸாதகர்களுக்கும் ஆளுமை குறைகள் களை யும் செயல்முறை மற்றும் அஹம்பாவத்தைகளையும் செயல்முறையை நடைமுறைப்படுத்தபோதிய நேரம் கிடைக்கிறதா?' என்பதைக் கண்காணிக்க வேண்டும்; அத்துடன் 'அவர்கள் மூலமாக சரியான முறையில் இந்த செயல்முறை நடக்கி றதா?' என்பதைப் பற்றியும் நடுநடுவே மதிப்பாய்வு செய்ய வேண்டும்.'

(பூஜ்ய) திரு. ஸந்தீப் ஆளஷி, ஸனாதன் ஆச்ரமம், கோவா.
தொடர்பு: 09380949626

# விஸ்வகர்மா விதிப்படி அமைக்கப்பட்ட கோவில்கள்

இந்து மரபில், தேவசிற்பி விஸ்வகர்மா வகுத்த விதிப்படி கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் எல்லாவற்றிலும், இறைவன் இறைவி பள்ளியறை பூஜை முடிந்தபின், மறு நாள் பிரம்ம முகூர்த்த வேளையின் போது தான் (3 மணி முதல் 5 மணி வரை) ஆலயங்கள் திறக்கப்பட வேண்டும்.

இதிலும் ஒரு விதிவிலக்கு உண்டு. ஸ்ரீ சக்ர பிரதிஷ்டை செய்யப்பட்ட திருத்தலங்களில் (காஞ்சி காமாக்ஷி ) ஒவ்வொரு பவுர்ணமி தோறும் இரவு நவாவர்ண பூஜை, இரவு பனிரெண்டு வரை நடைபெற்று, தேவி காமாக்ஷியாக, தங்க தேரில் கோவில் பிரகாரத்தில் வலம் வந்தபின் நடை சாத்தப்படும்.

**அது என்ன விஸ்வகர்மா விதிப்படி அமைக்கப்பட்ட கோவில்கள்?**

இது ஒரு மிக மிக விரிவான விஷயம். சுருக்கமாக சொன்னால், எந்த கோவில்களில் மூலவர் விக்கிரக சன்னதியில் நெய் தீபம் மட்டும் எரிகிறதோ, எந்த கோவில்களில் மூலவர் சன்னதி கருங்கற்களில் கட்டப்பட்டுள்ளதோ அல்லது கலர் கலராக டைல்ஸ் பதிக்கப்படவில்லையோ அவையெல்லாம் சில்ப சாஸ்திர விதிகளை பின்பற்றுபவை என்று கருதலாம்.



# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**



**தொடர்பு கொள்ள வேண்டிய எண்:**

**9444228203**

aanmeegamalar

தத்துவம் என்றால் உண்மை என்றுபொருள் படும். ஆன்மீகத்தில் முழுமையாக ஈடுபட்டு உண்மை நிலையறிந்த பட்டினத்தார், அருண கிரிநாதர், வடலூர் வள்ளல்பெருமான், ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்சர், ஸ்ரீசாரதாதேவி, சுவாமிவிவேகானந்தர், இராமானுஜர் போன்ற ஞானிகள் மற்றும் சித்தர்களால் வழங்கப்பட்ட தத்துவங்கள் அனைத்தும் நமக்கு ஆன்மீகத்தில் வழிகாட்டியாக இருக்கிறது. அவைகள் மனித வாழ்வின் உணர்வுகளை இன்பங்களை மகிழ்ச்சியை ஆன்மீக வழியில் நல்வழிப்படுத்துகிறது. அதேபோன்று நமக்கு வரக்கூடிய துன்பங்களை துயரங்களை நீக்குவதிலும், அவற்றை நாம் தாங்கிக்கொள்ளகூடிய மனவலிமையை, மனபக்குவத்தை அளிப்பதிலும் ஞானிகள், சித்தர்களின் தத்துவங்கள் முன்னிலை வகிக்கிறது.




தத்துவஞானிகள், பதினெண்சித்தர்கள் போன்றோர் தத்துவங்களில் தத்துவப்பாடல்களில் கூறியுள்ளபடி நாம் தகுந்த குருவின் மூலம் ஆன்மீக வழியில் பயிற்சி பெற்று அதன்படி செயல்புரியும்போது இதனை நாம் உணரலாம். அவ்வாறு ஆன்மீகவழியில் நாம் செயல்புரியும்போது வாழ்வின் உண்மை தத்துவம் நன்கு விளங்கும். ஆத்ம தத்துவம் என்பது விவேகம், வைராக்கியம், சமாதி மற்றும் மோட்சம் அடையவதற்கு விருப்பம் என நான்கு பண்புகளை உடையது. நாம் இந்த நான்கு பண்புகளைப் பற்றி சிந்திக்கும்போது ஞானம் பற்றி ஓரளவுக்கு தெரிந்து கொள்ள முடியும்.

தத்துவஞானி பட்டினத்தார் ‘காதறுந்த ஊசியும் கடைக்கண் வழிக்கு வராது’ என்று அவர் கூறியிருப்பது மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை வெறுத்து வாழ்க்கையில் விரக்தி அடைவதற்காக கூறப்பட்டதல்ல. நாம் குடும்பத்தை வெறுத்து துறவு மேற்கொள்வதற்காகவும் கூறப்பட்டதல்ல என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மனிதர்களே! வாழ்வில் உயர்பதவியில் இருக்கிறோம் என்று எவரையும் துச்சமாக நினைத்து மதிக்காமல் இருந்து விடாதே. பணம் அளவுக்கு அதிகமாக இருக்கிறதே என்று தலைகால் தெரியாமல் திரியாதே. அதிகம் படித்து விட்டோம் என்று யாரையும் மதிக்காமல் இறுமாப்பு கொள்ளாதே, புகழின் உச்சியில் இருக்கிறோம் என்று யாரிடமும் இகழ்ச்சியுடன் நடந்து கொள்ளாதே என்று மனித வாழ்வின் நிலையாமையை பற்றி ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு எச்சரிக்கையாக ஆன்மீக வழியில் பட்டினத்தாரால் கூறப்பட்டது.

பட்டினத்தார் மட்டுமல்ல மற்ற ஞானிகளும் இதே நோக்கில்தான் இந்த உலகத்தில் இருக்கும் பொருள்கள் அனைத்தும் நிலையற்றது என்று நமக்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

19

# ஆன்மீக வழியில் அமைதி

உலகில் காணும் பொருள்களினால் செயல்பாடுகளினால் வரக்கூடிய இன்ப துன்பங்கள் நிலையற்றது என்று உண்மைநிலையை எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

மேலும் அவர்கள் உலகில் காணும் பொருட்கள் அனைத்தும் நிலையற்றது என்று தத்துவப்பாடல்களால் வலியுறுத்தியது, நாம் வாழ்க்கையை வெறுத்து துறவு மேற்கொள்வதற்காக சுட்டிக் காட்டியது அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எனவே உலகில் காணும் அனைத்து உயிர்களிடத்திலும் வாழும்வரையில் மனிதர்களே உயிர் இரக்கமுடன் நடந்து கொள்ளுங்கள் என்று தங்கள் ஆன்மீக தத்துவங்கள், தத்துவப்பாடல்கள் மூலம் ஆன்மீக வழியில் சுட்டிக் காட்டியுள்ளனர்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

விவேகம் என்றால் அறிவு என்று பொருள் ஆகும். நித்தியம் என்றால் உலகில் அழியாமல் நிரந்தரமாக இருக்கக்கூடிய பொருள்கள் ஆகும். நீர், நிலம், ஆகாயம் காற்று, நெருப்பு போன்ற பஞ்சபூதங்கள் சூரியன், சந்திரன் போன்ற ஒன்பது கோள்கள் ஆகியவை நிரந்தரமானவை. அவைகள் எல்லாம் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட பாதையில் சுழன்று கொண்டிருப்பவையாகும். பஞ் சபூதங்கள், கோள்கள் ஏதோ ஒரு விதத்தில் தோன்றி மனித வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகளை நம்மையும் அறியாமல் செய்து கொண்டிருக்கின்றன.

சூரியன் காலையில் உதயமாகி மாலையில் உலகின் ஒரு பகுதியில் மறையும் தன்மையுடையது. நாள்தோறும் காலையில் சூரியன் உதயமாகி இந்த உலகத்திற்கு வேண்டிய வெளிச்சத்தைக் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. சூரியன் தான் சுற்றும் பாதையிலிருந்து இயல்புகளிலிருந்து எப்போதும் மாறுவதில்லை. இதேபோன்றுதான் உலகில் அனைத்து கோள்களும் உலகத்தில் காணும் உயிரினங்கள் வாழ்வதற்கு இப்பிரபஞ்சத்துடன் இணைந்து சுற்றி செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

உலகில் அழியக்கூடிய பொருள்களுக்கு அநித்தியம் என்று பெயர். உலகில் அழியக்கூடிய பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்ப துன்பங்கள் எல்லாம் நிலையற்றவை ஆகும். மனிதர்கள், மிருகங்கள் மற்றும் மரம் செடிகொடிகள் போன்ற அனைத்து உயிரினங்கள் அழியக்கூடிய பொருள்கள் ஆகும். உலகில் அழியும்பொருள்கள் அழியாப்பொருள்கள் எவை என்பதுபற்றி ஆன்மீக வழியில் தெளிவாக அறிந்துகொள்வதுதான் ஞான மார்க்கம் ஆகும். உலகில் எந்தப்பொருள்கள் அழியக்கூடியது எந்தப் பொருள்கள் அழியாமல் இருப்பது என்பது பற்றிய அறிவு, ஒருவர் தனக்குத் தெரியும் என்று கூறும்போது, அவரிடம் என்ன தெரியும் என்று நமக்கு இயல்பாக கேட்கத்தோன்றும். உலகில் எது அழியக்கூடியது எது அழியாமல் இருக்கக்கூடியது என்பதைப்பற்றி தெளிவான அறிவுதான் ஞானம் என்று வேதங்கள் சாஸ்திரங்கள், இதிகாசங்கள் எல்லாம் கூறுகின்றன.

வைராக்கியம் என்பது உலகில் காணப்படும் பொருள்களின் மூலம் கிடைக்கக்கூடிய இன்பம், மகிழ்ச்சி சுகத்தின் மீது ஒரு மனிதன் பற்றுக்கொள்ளாமல், ஆசைப்படாமல் இருப்பது வைராக்கியம் எனப்படும். உலகில் இன்பம் தரக்கூடிய அழியும் தன்மையுள்ள பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பங்கள், சுகங்கள் அனைத்தும் போகப்பொருள்கள் எனப்படும். நாம் அவ்வாறு போகப்பொருள்கள் மூலம் கிடைக்கக்கூடிய இன்பத்தை மகிழ்ச்சியை சுகவாழ்வின் மீது பற்றில்லாமல் இருக்கும் தன்மைக்கும் வைராக்கியம் எனப்படும்.

போகம் என்றால் மனிதனுக்கு உலகில் காணும் பொருள்களின் மூலம் வரக்கூடிய இன்பம், மகிழ்ச்சி, சுகம் போன்ற அனுபவங்கள் ஆகும். ஒரு பொருளைப் பார்த்தவுடன் அல்லது அவற்றை அனுபவவிப்பதின் மூலம் நமக்கு ஒருவிதமான இன்பம், மகிழ்ச்சி மனதில் ஏற்படுகிறது. நமக்கு விருப்பமான பாடல்களைக் கேட்கும்போது, இனிய இசையைக் கேட்பதன் மூலம் நமக்கு மனதில் ஒருவிதமான இன்பம், மகிழ்ச்சி சுகம் போன்றவை கிடைக்கிறது. காய்கனிகள் போன்ற உணவுப்பொருள்களை நாம் சுவைக்கும்போது அவற்றின் மூலம் நமது நாவிற்கு ஒருவிதமான இன்பம் கிடைக்கிறது.

ஒரு பொருளின் மீது ஆசைகொண்டு அதை வாங்கும்போது, விரும்பி உண்ணும் உணவின்மீது அதன் ருசியின்மீது பற்று கொண்டு இன்பம் அடைகிறோம். இதேபோன்று ஐம்புலன்களினால் நமக்கு வரக்கூடிய இன்பம்,

மகிழ்ச்சி, சுகம் போன்றவற்றை நுகர்ந்து கொள்ளலாம். ஆனால் அவற்றின் மீது பற்றுக் கொள்ளாமல் இருப்பது வைராக்கியம் ஆகும். உலகில் காணும் பொருள்களின் மீது அப்பொருள்கள் மூலம் கிடைக்கக்கூடிய இன்பதுன்பங்களின் மீது பற்று இல்லாமல் இருப்பது வைராக்கியம் ஆகும். உலகத்தில் காணப்படும் பொருள்களின் மூலம் நாம் அடையும் இன்பத்தில் மகிழ்ச்சியில் சுகத்தில் பற்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் அந்தப் பற்றுதல் நம்மிடம் தாமரை இலைத்தண்ணீர்போல் இருக்கவேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது.

பொதுவாக நாம் உலகில் காணும் பொருள்களில் எந்தப்பொருள்களை அடைவதன் மூலம், அந்தப் பொருள்களினால் வரக்கூடிய ஆனந்தம், இன்பம், மகிழ்ச்சி, சுகம் போன்றவற்றை நமக்கு அளிக்கிறதோ அந்தப் பொருள்கள் போகப்பொருள்கள் ஆகும். அவ்வாறு நாம் போகப்பொருள்களை அடைவதன் மூலம் கிடைக்கக்கூடிய இன்பம், ஆனந்தம், சுகமான வாழ்வு போன்றவற்றை நாம் அனுபவிப்பதற்கு காரணம், நாம் அறிந்தும் அறியாமலும் செய்த கர்மத்தின் பலன்கள்தான் என்று ஆன்மிகம் கூறுகிறது.

மனிதன் அறிந்தும் அறியாமல் செய்த கர்மபலன்கள்தான் ஒரு பொருளின் மீது அளவுக்கு அதிகமாக ஆசைகொள்ள வைக்கிறது. ஒன்றின்மீது அளவுகடந்த பற்று கொண்டால் அந்தப்பொருள்கள் மூலம் மனிதன் இன்பத்தையோ துன்பத்தையோ அடைகிறான். ஒரு பொருளை அடைவதன் மூலம் நமக்குக் மனிதனுக்கு கிடைக்கக்கூடிய மகிழ்ச்சி இன்பம் உலகில் நிலையானதாக இருந்தால், அவனுக்கு அந்த ஆனந்தம், இன்பம் மகிழ்ச்சியானது தொடர்ந்து கிடைக்க வேண்டும். அவ்வாறு மனிதனுக்கு அந்தப் பொருளினால் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சியானது அனைத்து நேரங்களிலும் தொடர்ந்து கிடைக்கிறதா? என்றால் அவ்வாறு உலகில் தொடர்ந்து மனிதர்களுக்கு கிடைப்பதில்லை என்பதை ஒவ்வொருவரும் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக கோடைகாலத்தில் ஐஸ்கிரீம் விருப்பமுடன் சாப்பிடுவது, குளிர்பானங்கள் போன்றவற்றை விருப்பமுடன் அருந்துவது நமக்கு இன்பம் தரக்கூடியதாக இருக்கிறது. ஆனால் ஐஸ்க்ரீம், குளிபானங்கள் போன்றவற்றை குளிர்காலத்தில் நாம் அவ்வாறு விரும்பி சாப்பிடுவதில்லை.

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegam.com
ஆன்மிகம்.காம்

அவ்வாறு ஐஸ்கிரீம் போன்றவற்றினை சாப்பிட்டாலும், அது நமக்கு கோடைகாலத்தில் சாப்பிடும்போது ஏற்பட்ட அனுபவித்த மகிழ்ச்சி எதுவும் உண்டாவதில்லை. குளிர் காலத்தில் ஐஸ் கிரீம் போன்ற குளிர்பானங்களை சாப்பிடுவதால் நமக்கு சளி காய்ச்சல் போன்ற உடல்நலக்குறைவுகூட ஏற்பட்டு விடுகிறது. இதிலிருந்து ஒரு பொருள் மூலம் நமக்குக் கிடைக்கும் ஆனந்தம் மகிழ்ச்சி கோடை குளிர் போன்ற எல்லா காலங்களில் நேரங்களில் கிடைப்பதில்லை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக ஒரு நண்பர் இருக்கிறார் அவரிடம் பேசிப் பழகுவதன் மூலம் ஒருவிதமான இன்பம் மகிழ்ச்சி நமக்கு கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் பேசும்போது பழகும்போது எல்லா நேரங்களிலும் நமக்கு அந்த ஆனந்தம், மகிழ்ச்சி போன்றவை தொடர்ந்து கிடைப்பதில்லை. அந்த நண்பர் இருக்கும் சூழ்நிலையைப் பொருத்து சில நேரங்களில், அதே நண்பர் ஏதோ ஒரு சூழ்நிலையில் நம் மீது கோபப்பட்டு பேசிவிடுகிறார். அப்போது நமக்கு அவரைப்பற்றி மனதில் துன்பம் வருத்தம் போன்றவை நம்மை அறியாமல் அவர் மீது வந்து விடுகிறது. எந்த நண்பருடன் நன்றாகப் பேசிப் பழகுவதன் மூலம் நாம் மகிழ்ச்சி அடைந்தமோ, அதே நண்பர் மூலம் சில நேரங்களில் சூழ்நிலையின் காரணமாக துயரமும் வருத்தமும் அடைந்து விடுகிறோம்.





நண்பர்கள் மட்டும் அல்ல உலகில் உள்ள எந்த உறவுகள் மூலம் நாம் அடையும் அனுபவவிக்கும் இன்பங்கள், துன்பங்கள், சுகங்கள் மற்றும் உலகில் காணும் அனைத்துப்பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பம், மகிழ்ச்சி, சுகம் போன்றவைகளும் இத்தகையதுதான். அதாவது உறவுகள் மட்டுமல்ல நாம் விரும்பி வாங்கும் பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பங்கள் நமக்கு நிரந்தரமான இன்பத்தையோ மகிழ்ச்சியையோ கொடுப்பதில்லை. இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது என்றால் ஒரு பொருளின் மீது உள்ள ஆசை பற்று அந்தப்பொருளை அடையும்போது கிடைக்கக்கூடிய வரக்கூடிய ஆனந்தம் இன்பம் நிரந்தரமானது அல்ல என்பதை நாளடைவில் உணர்ந்து கொள்ளலாம்.

உலகில் நாம் பயன்படுத்தும் பொருள்களான சொகுசு வாகனங்கள் மாளிகை, வீடு, தோட்டம் போன்ற பொருள்களை அடையும்போது அல்லது வாங்கும்போது ஓரளவு நமது மனம் மகிழ்ச்சியடைகிறது. ஆனால் நம்மிடம் புண்ணியப்பலன்கள் இருந்தால்தான் அந்தப் பொருள்கள் மூலம் வரக்கூடிய இன்பம் மகிழ்ச்சி ஆனந்தம் எல்லாம் நமக்குக் கிடைக்கும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு பொருள்களின் மூலம் நமக்குக் கிடைக்கும் இன்பங்களை மகிழ்ச்சியை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம். ஒன்று இவ்வுலகத்தில் உள்ள பொருள்களை அடைவதால் வரக்கூடிய இன்பங்கள் துன்பங்கள் மகிழ்ச்சி சுகம் போன்றவையாகும். மற்றொன்று சொர்க்கம், மோட்சம் போன்ற சாஸ்திரங்களில் இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள வேறு உலகங்களில் காணப்படும் இன்பம் ஆனந்தம் மகிழ்ச்சி போன்றவையாகும். இப்படிப்பட்ட நமது கர்மப்பலன்களினால் பொருள்கள் மூலம் நாம் அடையும் அல்லது நமக்கு வரக்கூடிய ஆனந்தம், மகிழ்ச்சி போன்றவற்றின் மீது பற்றுக் கொள்ளலாம். அந்த பற்று தாமரை இலைத் தண்ணீர்போல் பற்றில்லாமல் இருக்க வேண்டும். இதனை வைராக்கியம் என்று ஆன்மிகம் கூறுகிறது. இத்தகையதொரு வைராக்கியம் நம்மிடம் வந்துவிட்டால், இன்ப துன்பங்களை பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளும் மனபக்குவத்தை நாம் ஆன்மீக வழியில் அடையும்போது நாம் விரும்பும் தேடும் மனஅமைதி கிடைத்து விடும்..

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

**Stop the spread of germs that make you and others sick!**


# Cover your Cough




Cover your mouth and nose with a tissue when you cough or sneeze

*or*

cough or sneeze into your upper sleeve, not your hands.






Put your used tissue in the waste basket.



You may be asked to put on a surgical mask to protect others.

# Clean your Hands

after coughing or sneezing.





Wash hands with soap and warm water for 20 seconds

*or*

clean with alcohol-based hand cleaner.



aanmeegamalar.com